# இன்றும் நாளையும்






## '''லக்ஷ்மி''யின்

''பூங்கொடி'' வெளியீடுகளில் சில...

| | |
|---|---|
| ❖ அடுத்த வீடு | ... 145.00 |
| ❖ அரக்கு மாளிகை | ... 170.00 |
| ❖ அத்தை | ... 55.00 |
| ❖ அவளுக்கென்று ஒரு இடம் | ... 56.00 |
| ❖ இரண்டாவது மலர் | ... 130.00 |
| ❖ இரண்டாவது தேனிலவு | ... 45.00 |
| ❖ ஊன்றுகோல் | ... 60.00 |
| ❖ ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | ... 125.00 |
| ❖ ஒரு சிவப்பு பச்சையாகிறது | ... 90.00 |
| ❖ கதவு திறந்தால் | ... 95.00 |
| ❖ கதாசிரியையின் கதை (முதல் பாகம்) | ... 60.00 |
| ❖ கதாசிரியையின் கதை (இரண்டாம் பாகம்) | ... 70.00 |
| ❖ கைமாறியபோது | ... 85.00 |
| ❖ நதி மூலம் | ... 45.00 |
| ❖ நல்லதோர் வீணை | ... 75.00 |
| ❖ நிற்க நேரமில்லை | ... 80.00 |
| ❖ நியாயங்கள் மாறும்போது | ... 90.00 |
| ❖ பண்ணையார் மகள் | ... 115.00 |
| ❖ பவளமல்லி | ... 70.00 |
| ❖ பவானி | ... 50.00 |
| ❖ பெயர் சொல்ல மாட்டேன் | ... 50.00 |
| ❖ பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) | ... 70.00 |
| ❖ மருமகள் | ... 50.00 |
| ❖ மறுபடியுமா? | ... 85.00 |
| ❖ மீண்டும் பிறந்தால் | ... 85.00 |
| ❖ மீண்டும் பெண்மனம் | ... 70.00 |
| ❖ மோகத்திரை | ... 75.00 |
| ❖ ராதாவின் திருமணம் | ... 75.00 |
| ❖ ராமராஜ்யம் | ... 20.00 |

# இன்றும் நாளையும்

## 1

அந்தத் தனியார் கல்லூரியில் அவள் பௌதீக ஆசிரியை. பி.எஸ் சி. மாணவிகள் பலரைக் கட்டிமேய்க்கும் பொறுப்பான வேலை. ஆனால் ஓய்வு நாட்களில் அவள் பள்ளிக்கூடத்துச் சிறுமி போல வீட்டில், மகிழ்ச்சியில் பொங்கிப் போவது வழக்கம்.

வெள்ளிக்கிழமை மாலை, அவள் நேரிடையாக வீட்டிற்கு வரவில்லை. கல்லூரி முடிந்ததும் நான்கு மணியளவிலே பஸ் பிடித்து அடையாறுக்குப் புறப்பட்டிருந்தாள்.

சில நாட்களாக அவளுக்கு ஒரு சந்தேகம். அதை உறுதிப்படுத்திக் கொள்ளுமுன் அவள் மித்திரனிடம் ஏதும் தெரிவிக்க விரும்பவில்லை.

ஒரு தலைவலிக்குக்கூட அவள், டாக்டர் ரேவதியைத் தேடிக் கொண்டு அடையாறுவரை போவது வழக்கம். அந்தம்மாளின் கைராசியில் ஒரு நம்பிக்கை.

கஸ்தூரிபாய் நகரிலிருந்த ரேவதியின் கிளினிக்கிலிருந்து அவள் வெளியே வந்து பஸ் பிடிப்பதற்குள் மாலைப் பொழுது அமரத் துவங்கி விட்டிருந்து.

நிலையத்திலிறங்கி வீட்டை நோக்கி நடப்பதற்குள் தெருவிளக்குகள் பளீரென்று எரிய ஆரம்பித்தன.

அவள் கணவன் அலுவலகத்திலிருந்து திரும்பி விட்டான் என்பதை, தோட்டத்திற்குள் நுழைந்ததுமே, கண்டு கொண்டு விட்டாள். திறந்து வைத்துவிட்டுப் போயிருந்த கேரேஜ் கதவு மூடியிருந்தது. வீட்டு வராந்தாவிலும், சமையலறையிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

வழி நெடுகிலும் அவள் நேரத்தைப் பற்றியே கவலைப் படாது மனம் நிறைந்த மகிழ்விலே திளைத்தபடி வந்து கொண்டிருந்தாள்.

பெற்ற தாயைப் போல டாக்டர் ரேவதி அவளது முதுகைத் தடவிக் கொடுத்தபடி பேசினாள்.

''நிறையப் பால் சாப்பிடணும் - நான் குறிப்பிட்டுத்தரும் தேதிகளில் என்னை வந்து பார்க்கணும். நான் கொடுக்கும் ஆலோசனைகளை இம்மி பிசகாமல் கடைப்பிடிக்கணும் - தெரியுமா?''

கண்டிப்பும், அன்புமாக, கண்களைச் சிமிட்டிக் கொண்டு அவளது கன்னத்தை, லேசாக, வேடிக்கையுடன், டாக்டர் அம்மாள் தட்டியபோது... அவளுக்குத் தாயின் நினைப்பு வந்து விட்டது.

நன்றி உணர்விலே... கண் இமையில் ஈரம் கட்ட அவள் புன்னகைத்துவிட்டு, விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

சங்கதியைக் கேட்டதும், மித்திரன் முகத்தில் ஏற்படப் போகும் மாறுதல்களை எண்ணியபடியே தனக்குள்ளே சிரித்துக் கொண்டவள், கைப்பையிலிருந்த சாவியை எடுத்து வாயிற் கதவின், காட்ரஜ் சாவித் துவாரத்தில் நுழைத்துத் திருப்பினாள்.

மித்திரனுக்குப் பாம்புச் செவி.



''அனுவா? அப்பாடி... கவலைப்பட்டுப் போய் விட்டேன். உன் சிநேகிதி ஹேமாவோட கடைத் தெருவில சுத்திக்கிட்டு இருக்கியோன்னு நினைச்சேன்'' - அடுப்பிலே கொதித்துக் கொண்டிருந்த சாம்பார் பாத்திரத்தை இடுக்கியால் பிடித்துத் தூக்கியபடி, சாப்பாட்டறைக்குள் வந்தான்.

அவள் திரும்புவதற்குள் சாப்பிடத் தயாராக, தட்டுகளை மேஜை மீது வைத்திருந்தான். அருகிலே தம்ளரில் நீர் - எல்லாம் தயார்.

சாம்பார் பாத்திரத்தைக் கவனமாக மேஜை நடுவில் வைத்தபடி, ''வாத்தியார் அம்மாளுக்குப் பசி தாங்காதேன்னிட்டு... எல்லாத்தையும் தயாரா வச்சிருக்கேன்'' என்று சிரித்தான் மித்திரன்.

அலுவலகத்திலிருந்து வந்து - குளித்து - அவன் மீண்டும் வெளியே செல்லத் தயாராக உடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''பகல் பொழுதே உனக்கு டெலிபோன் செய்திருக்கணும். வேலை சரியா இருந்தது. வந்ததும் சொல்லிக் கொள்ளலாம்னு நினைச்சேன். டைரக்கடரின் திடீர் ஏற்பாடு. ராத்திரி ஃப்ளைட்டுக்கு, பம்பாய்க்குக் கிளம்பிட்டு இருக்கேன். பெட்டியெல்லாம் தயார் செய்து வச்சாச்சு... சாப்பிட்டுப்பிட்டுக் கொஞ்ச நேரத்திலே கிளம்பணும்... நீ வரலையேன்னு கவலையா போயிட்டுது. உம்மிடியார் செண்டரில் ஏதோ 'ஸேல்ஸ்'னு காலை பேப்பர்ல பார்த்தேன்... அங்கத்தானே போயிருந்தே.''

''ஊஹூம்! டாக்டர் ரேவதியைப் பார்க்க.'' - கூறியபடியே அவள் குளியலறைக்குள் விரைந்தாள்.

''வழக்கமாக வரும் ஒத்தைத் தலைவலிதானே.''

முகத்தைக் கழுவினாள். அவசரமாகத் துடைத்து முடியைச் சீராக்கி, அலமாரித் தட்டிலிருந்த குங்குமச் சிமிழைத் திறந்து, பொட்டு வைத்துக் கொண்டாள்.

வெளியூர் புறப்படும் இந்த வேளையில் இதைச் சொல்ல வேண்டியது அவசியமா? அலுவலகத்தில் வேலையில் மனம் ஓடாமல் படாதபாடு படுவாரே... மித்திரனுக்காக மனம் கரைந்து போனாள்.

''நான் ஏதாவது உதவி செய்யணுமா?'' - கேட்டபடி சாப்பாட்டறைக்குள் வந்தாள்.

''கட்டாயமா?'' - குறும்பாகச் சிரித்தபடி, ''என் கூட உக்காந்து நீயும் சாப்பிடணும். ஏன்னா, நான் திரும்ப ஒரு வாரம் பிடிக்கும்...'' என்றான் தொடர்ந்து.

கண்களுக்கு இமை போன்ற கணவன் மித்திரன். கணவன் என்பதைவிட, உயிருக்கு இனிய நண்பன் என்று நினைக்கும் அளவிற்கு, சரிசமமான உரிமை தந்து, அவளை மதிப்போடு நடத்துபவன்.

மூன்றரை வருட தாம்பத்திய வாழ்வில் அவள் அறிந்த அனுபவந்தான்... அடிக்கடி இப்படி ஒரு பிரிவு அவர்களுக்குள்.

கம்பெனி காரியமாக - பம்பாய்க்கும் - டெல்லிக்கும் - கல்கத்தாவிற்கும் - இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை - அவன் பறந்து கொண்டிருப்பான் - திரும்ப சில நாட்கள் பிடிக்கும்.

சாதாரணமாக அவன் வார நாட்களில்தான் கிளம்புவது வழக்கம். இந்த முறை வார இறுதியில் அவன் கிளம்புகிறானே? அவளுக்கு ஒரு சிறு உறுத்தல்.

சனி - ஞாயிறு விடுமுறை நாட்களை அவள் தன்னந்தனியே வீட்டில் கழிக்கப் போகிறாள் - காலையிலிருந்து அஸ்தமிக்கும் வரை, பொழுது நீண்டு கனத்து, அவள் பொறுமையைச் சோதிக்கப் போகிறது.

''என்ன ஒரே மௌனம்'' - வேடிக்கையாக அவளருகே வந்தமர்ந்த மித்திரன், அவள் தோளைத் தொட்டுக் குலுக்கினான்.



குளித்த பின் - பயணத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்தவன் மேலிருந்து கம்மென்ற 'டியோடரிண்ட்ஸ்ப்ரே'யின் மணம்... அவனது அருகாமையை - இனிமையை உணர்த்தியபோது மனம் லேசாகக் கனத்தது.

இன்றைக்குப் பார்த்தா அவன் கிளம்ப வேண்டும்?

''நாளைக்குப் பகல் சாப்பாட்டுக்கு, உங்களுக்குப் பிடிச்ச பருப்புக் கிச்சடி செய்யலாம்னு திட்டம். ஃபவுல் பிளே படத்துக்குப் போகணும்னு ஆசையா எதிர்பார்த்திட்டிருந்தேன்.'' சிணுங்கிய படி, துவாலையை நாற்காலி முதுகில் போட்டுவிட்டு, தட்டுகளில் பரிமாறத் தொடங்கினாள்.

''பம்பாயிலிருந்து திரும்பின பிறகு எனக்குப் பருப்புக் கிச்சடி கிடைக்காதோ... 'ஃபவுல் ப்ளே'யைப் பார்க்க முடியாமப் போயிடுமா?'' - கேலி செய்தபடி அவளை இழுத்து எதிர் நாற்காலியில் உட்கார வைத்துவிட்டுச் சாப்பிடத் துவங்கினான்.

வேலைக்குப் போகுமுன் சமைத்து ஃபிரிஜ்ஜிற்குள் திணித்துவிட்டுப் போன அவசர சமையல்தான். பதார்த்தங்கள் சுவையாகத்தானிருந்தன.

''புடலங்காய்க்கூட்டு ஏ, ஒன்! சமையலிலும் நீ ரொம்ப கெட்டிக்காரிதான்'' - புகழ்ந்தான் மித்திரன்.

''சமையல்காரியின் மகள் - பரம்பரைக் குணம் எங்கே போகும்.''

''இதுதானே ஆகிறதில்லை. இப்படிப் பேசக்கூடாதுன்னு எத்தனைவாட்டி சொல்லியிருக்கிறேன்'' அன்புடன் கடிந்து கொண்டான் அவன்.

ஆசையுடன் அவனிடம் சொல்ல வந்த அந்த மகிழ்ச்சியான சங்கதியைச் சொல்ல முடியாது அலுவலகத்து வேலை குறுக்கிட்டு விட்டதே என்ற ஆதங்கம் அவளுக்கு.

வேதனையை விழுங்கிக் கொண்டாள். ''வேடிக்கையாகச் சொன்னேன். உண்மையைத்தான் சொன்னேன். உண்மையைச் சொல்ல நான் ஒரு போதும் வெட்கப்பட்டதில்லையே.''

அதற்கு மேல் மித்திரன் தர்க்கம் புரிய மனமின்றிப் பேச்சை மாற்றினான்.

''முன்போலில்லை. ஊர் கெட்டுக் கிடக்கு. நீ தனியா வீட்டிலே இருப்பயேன்னு மனதில் கொஞ்சம் கவலையாகத் தானிருக்கு - வெளியே போகனும்னு தோணினா - காரை எடுத்துக்கிட்டு போ -''

''உங்க ஆபீஸ் காரை நான் தொடமாட்டேன். வீண் வம்பு - வெளியே போகனுமா? பஸ் இருக்கவே இருக்கு -''

''ஆபீஸ் டிரைவரை வரச் சொல்லவா?''

''வேண்டாம். நீங்க இல்லாத போது, இங்கே யாரும் வருவதை நான் விரும்பறதில்லை-''

''அதுவும் சரி, பத்திரமா உள்ளே கீழ்த் தாழ்ப்பாளையும் போட்டுக்கோ, பயமா இருந்தா - வேலைக்கார அம்மாளை நடையில் துணையாகப் படுக்க வச்சுக்கோ.''

''எனக்குத் தனியாக இருந்து பழக்கம்னு சொன்னால் மறுபடியும் நீங்க பழைய கதையை ஆரம்பிக்கிறேன்னு நினைச்சுப்பீங்க. ஊருக்கு நிம்மதியா நீங்க புறப்படுங்க, என்னத்துக்கு இந்தத் தடவை இப்படியெல்லாம் மனதைக் குழப்பிக்கிறீங்க...!''

சாப்பாடு முடிந்தது. சிறிது நேரத்தில் அவன் கிளம்ப வேண்டியிருந்தது. தானே வெளியில் சென்று ஒரு டாக்ஸியுடன் திரும்பி வந்தான். பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவளுடன் வந்தவன். ''பத்திரம் - சொன்னதைக் கவனத்தில் வச்சுக்கோ -



ஓ.கே.-'' -பிரிய முடியாதவன் போல - தயக்கமாக அவளை இருமுறைத் திரும்பி பார்த்துவிட்டுத்தான் கிளம்பினான்.

''தனியாக நான் இல்லை. கூட எனக்கொரு துணை, உங்க வாரிசு எனக்குள்ளே வளர்ந்துகிட்டு இருக்கு'' - என்று உரத்த குரலில் கூறி வழியனுப்ப ஆசை - உதடு வரை வந்து அடங்கிப் போயிற்று.

அவள் தாயாகப் போகும் அந்த இனிய சங்கதியை அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருக்கும்போது சொல்ல விருப்பமில்லை. கடற்கரையில், காரில் காற்று வாங்கப் போகும் பொழுதோ அல்லது வீட்டில் - காலைப் பலகாரத்திற்குப் பின்னர் ஓய்வாகப் பத்திரிகையுடன் உட்கார்ந்திருக்கும்போதோ... அவள் சாவகாசமாக - மெள்ள - அந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல வேண்டும்.

கேட்டைத் தாண்டி, டாக்ஸி வெளியேறும்வரை, கையை அசைத்து 'டாடா' காட்டியபடி பின் தொடர்ந்தவள், கேட்டை மூடிவிட்டு, வராந்தா மீது ஏறினாள். டாக்ஸி மறைந்ததும் வாயிற் கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

கணவன் - மனைவி என்ற இருவர் கொண்ட குடும்பம் அது. கூடவே அவன் இருக்கும் பொழுது கலகலக்கும் வீடு இப்போது வெறிச்சென்று சூன்யமாகி விட்டதை உணர்ந்தாள்.

நாள் முழுவதும் உழைத்துவிட்டு வருகிறவன்தான் மித்திரன். குளித்துவிட்டு, லுங்கி பனியனில், சாய்வு நாற்காலியில் பத்திரிகையுடன் உட்கார்ந்து விடமாட்டான்.

அவர்களது சின்னஞ்சிறு தோட்டத்துச் செடிகளுக்கு 'ஹோஸ்' பைப்பில் தண்ணீர் ஊற்றுவான் - செடிகள் என்றால் அவனுக்கு உயிர் - இருட்டியதும், வீட்டிற்குள் வந்து பூஜை அறையிலிருந்த தன் அத்தையின் படத்திற்கு ஓர் ஊதுவத்தி ஏற்றி வைப்பான்.

தாயை இழந்தபின் அவனை எடுத்து வளர்த்து ஆளாக்கியதுடன் தனக்குப் பின் தன் வங்கியிலிருந்த கணிசமான தொகைக்கு அவனை வாரிசாக்கிவிட்டுப் போயிருந்தாள் காமாக்ஷி அத்தை.

அந்தப் பணம்தான், இப்போது வசிக்கும் வீடும் தோட்டமும், இரண்டாண்டுகளுக்கு முன் அங்கே இடம் வாங்கி அழகாகக் கட்டி முடித்து, தோட்டம் வீடு என்ற சிறு வட்டத்திற்குள் அவனது வாழ்வு அடங்கிவிட்டிருந்தது.

மித்திரன் இல்லாத வெறுமையைப் போக்கத் தொலை காட்சியை, ஆங்கிலச் செய்தி முடியும்வரை பேசவிட்டாள். பின்னர் அதையும் அணைத்துவிட்டுப் படுக்கையறைக்குள் சென்று தாளிட்டுக் கொண்டு படுக்கையில் விழுந்தாள்.

தலைக்கு மேல் எரிந்த விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் மேஜைமேல் அவன் முதல்நாள் இரவு படித்து வைத்து விட்டுப் போன புத்தகங்கள் நிழலாகத் தெரிந்தன. கடந்த காலத்து நினைவுகள் நெஞ்சிலே புரள, அவள் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உறங்க முயன்றாள்.

மித்திரனுக்கும் அவளுக்கும், தோற்றத்திலும் உணர்வு களிலும் - சில வேறுபாடுகள் உண்டு.

இருவருக்கும் இணைந்த சில சிந்தனைகளும் உண்டு. அதிகமான ஆர்ப்பாட்டமான நண்பர்கள் படையை வெறுப்பவர்கள் இருவரும்.

அவசியமற்ற பார்ட்டிகளுக்குப் போக அவன் விரும்பியதில்லை.

கல்லூரியில் வேலை பார்ப்பவர்கள் என்று நட்புரிமை பாராட்டிக் கொண்டு மற்றப் பெண்களை வீட்டிற்கழைப்பதும் விருந்திற்குப் போவதும் அவளுக்குப் பிடிக்காது.



தோற்றத்தில் அவள் தாழம்பூ நிறம்... ஒடிய உயரமாக... கஞ்சியில் விரைத்து நிற்கும் வாயில் சேலையில் கூடக் கண் நிறைந்த அழகி.

சில ஆங்கிலப் படங்களில் (வெஸ்டர்ன்) கதாநாயகன் போல, உயரமாக, கச்சிதமான பருமனில் கரடு முரடான முகபாவத்திலே சிறிது உள்ளடங்கிய மூக்கு... கூர்மையாகப் பளபளத்த கண்களும்... அடர்த்தியான முடியுமாக அவன் மாநிறமாக இருந்தான்.

பக்கென்று பல்வரிசை தெரியச் சிரிக்கும் போதுதான் முகத்திலே படிந்து கிடக்கும் முரட்டுத்தனம் கரைந்து கண்களிலே பூவைப் போன்றதொரு மென்மை தவழும்.

''அப்படி முறைக்க வேண்டாம். கொஞ்சம் சிரியுங்கள் பார்க்கலாம்'' - எத்தனையோ முறை அவள் கொஞ்சி விளையாடி இருக்கிறாள்.

''போட்டோ எடுக்கப் போகிறாயா? இந்தா! சிரிக்கிறேன். நிறைய 'போஸ்'லே எடுத்துக்கோ'' என்று அவனும் வேடிக்கையாகச் சிரித்துச் சமையலறையில் அவளுக்குப் பின்னால் வந்து நின்றுகொண்டு - உஷ்ணமான மூச்சுக் காற்று அவள் கழுத்தில் படியத் தானும் உதவுவதாகப் பிடிவாதம் செய்து லூட்டியடித்துக் கொண்டு... சனிக்கிழமை, ஞாயிறு தினங்கள் போனதே தெரியாது... அமர்க்களப்படுத்தி அவளை ஆனந்தத்தில் ஆழ்த்தி விடுவான்.

எக்காரணம் கொண்டும் வார இறுதியில் அவன் அவளை விட்டு வெளியூர் போவதில்லை. திங்கள் காலையில் கிளம்பிச் சென்றால் - வெள்ளிக்கிழமை இரவுக்குள் பறந் தோடி வந்து விடுவான். இந்த முறை மட்டும் இப்படி ஏனோ ஒரு மாற்றம்...? அவளுக்குப் பெருத்த ஏமாற்றமாகத் தானிருந்தது.

மைத்ரேயி அம்மாளுக்கு மாரடைப்பு வந்து மிகவும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் ஆறு வாரம் தங்கிவிட்டு வீட்டிற்கு வந்திருந்தாள். ஓய்விலிருந்த நோயாளியைக் கவனித்துக் கொண்டு, வீட்டை நிர்வகித்துக் கொண்டு... வேலைக்காரி, சமையற்காரி, நர்ஸ் என்ற எல்லா நிலையிலும் உழன்னு கொண்டிருந்த அனு அப்போதுதான் 'ஹார்லிக்ஸ்' கரைத்துக் கொண்டு அடுப்பருகில் நின்று கொண்டிருந்தாள்.

வாயில் அழைப்பு மணி ஒலித்தது - கண்ணாடி இடுக்கு வழியே பார்த்தாள். சார்லஸ் பிரான்ஸன் போல யாரிவன் - ? என்று அதிசயித்தாள். ''யாரது'' - இந்தியில் அதட்டினாள்.

''மித்திரன்! மைத்ரேயி அம்மாளின் உறவு - வந்திருக்கேன்னு சொல்லுங்க'' சுத்தமான தமிழில் பதில் வந்தது.

அந்தக் கரடு முரடான முகம் - முதல் பார்வையில் அவளைக் கவர்ந்து கொள்ளவில்லைதான்.

இரண்டாவது முறை - அவன் தன் பெரியம்மாவைப் பார்க்க வந்தான் - மூன்றாவது முறையும் வந்தான்.

போலித் தடங்கல்கள் இன்றி சுபாவமாக அவளிடம் பேசினான்; பழகினான்.

அவன் வாய்விட்டுச் சிரித்தபோது பளிச்சிட்ட அந்த வரிசைப் பற்களால் முகத்திலே பரவி நின்ற முரட்டுத்தனம் மறைந்து போய்விட்டது போன்றதொரு அதிசயத்தில் அனு மயங்கிப் போனாள்.

வெளிப்படையான அவன் பேச்சு... வித்தியாசமான அவனது சிந்தனைகள்... எல்லாம் அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிருந்தன.

துன்பமான அனுபவங்களைச் சந்திக்கும் துணிவில்லாத கோழை மனம் கொண்டவள் அவள்.



யாருக்குத்தான் வாழ்க்கையில் கவலையும், கஷ்டங்களும் ஏற்பட்டதில்லை?

அவனுக்கும் பல ஏற்பட்டிருந்தன... அவைகளை மறந்து மனதினின்றும் ஒதுக்கிவிட்டு... துணிவுடன் தலையை நிமிர்த்திக் கொண்டு வாழத் தெரிந்தவன். அடிப்படையிலே அவர்களுக்குள் இந்தப் பெரியதொரு வித்தியாசம் இருந்தது.

ஒரு சமயம்... இந்த வித்தியாசமான உணர்வுகள் தான் அவர்களை ஈர்த்துக் கொண்டதோ என்னவோ?

மூன்றாம் முறை மைத்ரேயி அம்மாளைக் காணவந்த போது, தன் விருப்பத்தை வெளிப்படையாகவே சொல்லி விட்டிருந்தான்.

படுக்கை மீது துவண்டு கிடந்த மைத்ரேயி அம்மாள் அவளை அன்போடு அருகில் அழைத்தாள்.

''என் தங்கச்சி மகன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறான். உனக்கும், அவனுக்கும் இடையே பனிரெண்டு வருஷ வித்தியாசம் இருக்கு. அது ஒரு பெரிய இடைவெளி இல்லேன்னு நான் நினைக்கிறேன். அவன் முகபாவம் அப்படிக் கொஞ்சம் கடுமையா இருக்கேன்னு பயப்படாதே. மனசிலே சொக்கத் தங்கம்! நல்லா படிச்சவன். கைநிறையச் சம்பாதிக்கிறான். மாமியார், நாத்தனார், மச்சினன்னு பிக்கல் பிடுங்கல் இல்லாதவன். ஏன்னா, அவனும் சின்ன வயசிலே அம்மாவை, உன்னைப் போல இழந்தவன். அத்தை பராமரிப்பிலே வளர்ந்து ஆளானவன்... சமீபத்தில் அவன் அப்பாவும் அந்த அத்தையும் ஒருத்தர் பின் ஒருத்தரா காலமாயிட்டாங்க. கட்டுத் தறியில்லாத கன்னுக்குட்டி மாதிரி அலையறான் அமைதியில்லாம. ஒரு கால்கட்டுப் போட்டா சரியாகிடும்னு உபதேசித்ததன் விளைவு... உன்னையே கட்டிக்கணும்கிறான்...'' - மெல்லிய குரலில் பேசி முடித்தவளுக்கு மூச்சுத் திணறியது.

அனு மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''வேண்டாம் - வேண்டாம்'' என்று சொல்லத் தெரியாமல் ஒரே குழப்பம்.

''இதப் பாரு அனு! இதில் எந்த விதமான வற்புறுத்தலும் இல்லை. நான் உன் வளர்ப்பு அம்மாளும் இல்லை. உன்னைக் கட்டாயப்படுத்த எனக்கு உரிமையும் கிடையாது. எனக்கு உடம்புக்கு முடியாதுபோன பிறகு உன்னைப்பத்தின நினைப்பு அதிகமாயிட்டுது. எனக்கு ஏதாச்சும் ஏற்பட்டுட்டா பிறகு உனக்கு யார் ஆதரவு? நீ யாருமில்லாம, தவிக்கக் கூடாதுங்கறதுக்காக ஒரு நல்லவன் கையில் உன்னை ஒப்படைச்சிட்டுப் போகணும்னு விரும்பறேன்... பிறகு உன் இஷ்டம்......'' திணறிவிட்டு, அனுவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''உங்கள் விருப்பம் என் விருப்பம்னு நினைச்சுக் கொள்ளுங்கம்மா. எனக்கு நீங்க நல்லதுதானே செய்வீங்க.''

அவளைப் பொறுத்தவரை - சமூக சேவகி - மைத்ரேயி அம்மாள் அவளுக்குப் பாதுகாப்பளிக்க நிச்சயித்த கல்யாணம் அது.

அவனைப் பொறுத்தவரை - பார்த்த அளவிலேயே அவளிடம் மனதைப் பறிகொடுத்துவிட்ட ஒரு காதல் கல்யாணம்.

அந்த முகத்திலே தெரிந்த முரட்டுத்தனம் கூட, நாளடைவிலே, பழகிப் போனதாலோ அல்லது அவனது அன்பில் கண்டுண்டதாலோ, விரைவில் மறைந்து மன்மதனாகத் தெரிய ஆரம்பித்தான்.

அவனது பிரிவு ஆற்றாமையையும் துயரத்தையும் தந்தது. நெருக்கம் இனிமையையும், நேசத்தையும், அன்பையும் அள்ளித் தந்தது.



அவர்களது திருமணம் மிக எளிய முறையில் ஹைதராபாத்திலேயே நடந்தது. அதுவரை மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்தவள் போல... மைத்ரேயி அம்மாள் உயிரோடு இருந்து அவர்களை மனம் நிறைய வாழ்த்தினாள். பின்னர் சில தினங்களிலேயே மற்றொரு அழுத்தமான மாரடைப்பில் ஆஸ்பத்திரியிலேயே இறந்து போய் விட்டாள்.

அவளது சொத்து, வீடு யாவற்றையும் சமூக நலத்திட்டங்களுக்கு எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தாள். தனது ஞாபகமாக இருக்கட்டும் என்று ஒரு இரும்பு அலமாரியையும், ஆயிரம் ரூபாய் பணத்தையும், திருமணப்பரிசாக அவர்களுக்குத் தந்து விட்டிருந்தாள். அந்த அலமாரியில்தான் அனு தன் புடவை, நகை இத்யாதிகளைப் பத்திரமாக வைத்துக் கொள்வது வழக்கம்.

விடிவிளக்கிலே அறை முழுவதும் நினைவுகள் நிழலாக ஊர்ந்து உறக்கத்தைக் கெடுப்பதை உணர்ந்து, கைக்கெட்டிய தூரத்தில் தொங்கிய மின்விசைப்பட்டனை அமுக்கினாள்.

அறைக்குள் ஒரே இருள். அடுத்த வீட்டு நாய் எதற்காகவோ குரைத்துக் கொண்டு தோட்டத்திற்குள் வளையவரும் சப்தம்... நெடுஞ்சாலையில் இரவின் அமைதியைக் கலைத்துக் கொண்டு அவ்வப்போது ஓடிய வாகனங்களின் 'கிர்'ரென்ற ஓசை. கிணற்றிலிருந்து வந்ததுபோல... நேரத்துடன்... அழுத்தம் குறைந்து ஒலிக்க... அவளும் உறக்கத்திலே ஆழ்ந்து போனாள்.

'விருக்'கென்று விழித்துக் கொண்டாள். பளிச்சென்று காலை சூரிய ஒளி, ஜன்னல் வழியே படுக்கை மீது வீசிக் கொண்டிருந்தது. வாயில் அழைப்பு மணி ஆத்திரமாக ஒலித்தது.

தலைவரை வழிந்து கொண்டிருந்த போர்வையை உதறி விட்டுக் குதித்தெழுந்தாள் அனு.

ஓடிச் சென்று வாயிற் கதவைத் திறந்தபோது வேலைக்காரி, பால்புட்டி, இந்து பேப்பர் சகிதம் கோபத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

''எத்தனை வாட்டி அடிக்கிறது? ஐயாகூடவா தூங்கறார்? நாலு வீட்டுக்கு வேலை பார்க்கறவளாச்சே. உங்க ஊட்லியே இத்தனை நேரம் நின்னுக்கிட்டிருந்தா...'' - அவள் தள்ளாத குறையாக உள்ளே நுழைந்தாள்.

சூடான காப்பி, தன் பங்காக... மேஜை மீது டம்ளரை நிறைக்க, வைக்கப்பட்ட பிறகு தான் வேலைக்காரி முருகம்மாளின் முறுக்கிக்கொண்ட முகம் மலர்ந்து போயிற்று.

''சனிக்கிழமையா? தூங்கிட்டே... ஐயா இல்லியா? அதான் அப்படி நிதானமா இருக்கே. சட்டுப்புட்னு குளிச்சுடு... துணியைத் துவைச்சுப் போட்டுட்டு நான் அந்த ஜெயா அம்மா ஊட்டுக்குக் கிளம்பணும். கொஞ்ச நேரமானாலும் அந்தம்மா முகத்தைத் தூக்கி வச்சிக்கிடுவாங்க'' - பற்களின் வெற்றிலைக் காவியைக் காட்டியபடி சிரித்தாள்.

''இருந்தாலும் ஐயாவாட்டமா உனக்குக் காப்பி போடத் தெரியலை. அவரு போட்டா... கள்ளிச் சொட்டு போல நாக்கு மேலேயே ருசி... சுழண்டுகிட்டுக் கிடக்கும். ஐயரு ஹோட்டல் காப்பி கெட்டுது போ'' எஜமானியையே மட்டம் தட்டிவிட்டு, பாத்திரங்களைத் தேய்க்க உள்ளே சென்றாள் முருகம்மாள்.

வேகமாகக் குளித்து உடுத்திக் கொண்டு, ப்ரீத்தில் இட்லிக்கு ஊற்றி ஏற்றிவிட்டுத் திரும்பியபோது தொலை பேசி கிணுகிணுத்தது.

பம்பாயிலிருந்து அவள் கணவன் பேசுகிறான் என்று அவளுக்குத் தெரியும்.



எங்கே போனாலும், காலை வேளையில் அவளைத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசாவிடில் அவன் தலை வெடித்து விடும்.

''ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் ஜம்முனு... நுரை மெத்தைப் படுக்கையிலே படுத்தபடி, சும்மா இருக்க முடியலையாக்கும்'' கிண்டலாகப் பேசினாள் அவள் தொலைபேசியில்.

''இப்போ நீ என்ன செய்துகிட்டிருக்கேன்னு... டி.வி.யில பாக்கறாப் போல இங்கே தெரியுது!''

''இதுக்காகவா இந்தக் 'கால்?''

''உங்கூடப் பேசணும்னு தோணிச்சு. கூப்பிட்டேன்... வெளியே தலை நீட்ட முடியாது போல ஒரே மழை இங்கே?'' - பேச்சை மாற்றினான்.

''இருந்த ஒரு நல்லவரும் புறப்பட்டுப் போய்விட்டதனாலே இங்கே துளி மழைக்கூடக் கிடையாது. மழைக்கோட்டு, தொப்பி இல்லாமல் வெளியே போகாதீங்க. போனவாட்டி மூக்குமுட்ட ஜலதோஷத்தோட வந்தீங்க... ஆமாம் ஏற்கனவே சின்ன மூக்கு வேறே-'' எச்சரித்தாள் கொஞ்சலாக.

''மிளகு ரசம் வச்சு தர மாட்டேங்கறே. நானே வச்சுக் கொள்கிறேன்.''

''இந்த அடந்தானே வேண்டாங்கறேன்.''

''இந்தத் தடவை என்ன வாங்கிக்கொண்டு வரணும்?''

'பப்பளிமாஸ் பழம்' சொல்ல வாய் எடுத்தவள் 'அப்படி என்ன அந்தப் பழத்துலே மோகம்? மசக்கையா?' என்று கேட்டு விட்டால் - நேரில் சொல்லக் கூடிய இன்ப சமாசாரம் ஆயிற்றே! சட்டென, 'ஒண்ணும் வேணாம். பத்திரமா, சீக்கிரமா வந்து சேருங்க போதும்'' என்றாள்.

''என் பங்கு இட்லியையும் சேர்த்து சாப்பிட்டு உடம்பைக் கவனிச்சுக் கொள்ளு... டயட்டு, மண்ணாங்கட்டியெல்லாம் மூட்டை கட்டிவை. நீ அப்படியே அன்னைக்குப் பார்த்ததுபோலக் கொடி மாதிரி இருக்கே.''

அவள் சிரித்தாள்.

''சரி! பத்திரம். ஏதாவது முக்கியமான செய்தி இருந்தா இந்த நம்பருக்கு டெலிபோன் செய். மேஜை மேலே குறிச்சு வச்சிருக்கிறேன். தெரியுமில்லையா? வைக்கட்டுமா?'' அரை மனதுடன் போனை வைத்தான் அவன்.

உப்பு சப்பில்லாத சம்பாஷணைக்கு... வீண் செலவு செய்து - தொலைபேசியின் பேச்சிற்குக்கூட விலை கூடி விட்டிருக்கிறது - நினைத்தபடி, குக்கரைக் கவனிக்க உள்பக்கம் சென்றாள்.

வேலைக்காரி முருகம்மாள் அசுரவேகத்தில் வேலையை முடித்துக் கொண்டாள். அதே வேகத்தில் அவள் கொடுத்த இட்லியை வாழை இலையில் சுருட்டிக் கொண்டு மாயமாகி விட்டாள்.

மித்திரன் வீட்டில் இல்லாமல், லீவு நாள் நத்தைபோல ஊர்ந்தது. வாயிற் கதவைத் தாளிட்டுக் கொண்டு, உணவைத் தயாரித்துவிட்டு முன்னறையில் வந்தமர்ந்தாள்.

ஏதாவது வேலை செய்யாவிட்டால், பொழுது போகாமல் இருந்துவிடும் போலத் தோன்றியது. வீட்டிலிருந்த தனது அலமாரியைத் திறந்து எல்லாச் சாமான்களையும் ஒழுங்கு செய்ய முற்பட்டாள். மித்திரனின் காரியங்கள் எப்போதுமே கச்சிதமாக இருக்கும். அவனது சட்டைகள் வேட்டிகள் எல்லாம் மடிப்புக் கலையாது அழகாக அலமாரித் தட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.



அடுத்த நாள் உடுத்தப் போவதை ஹாங்கரில் மாட்டித் தயாராக வைத்திருப்பான். அவளது அலமாரியைத் திறந்தாலோ சேலை கிடைத்தால் ரவிக்கை கிடைக்காது; ரவிக்கை கிடைத்தால் சேலை கிடைக்காது, ஒரே குழப்பம்.

அவசரமாகக் கிளம்பும்போது பர்சை எடுக்க அலமாரியைத் திறந்தால், அதற்குள் திணிக்கப்பட்டிருக்கும் அத்தனையும் தொப்பென்று கீழே கொட்டித் தொலைக்கும்.

''ஞாயிற்றுக்கிழமை கட்டாயம் எடுத்து ஒழுங்கா அடுக்கி வைக்கறதுதானே?'' மித்திரன் சொல்லிக் கொண்டே கீழே விழுந்தவைகளைப் பொறுக்கி எடுத்து உதவும்போது அவளுக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். தனது குற்றத்தை அவன் சுட்டிக் காட்டுவது போலச் சிணுங்கிக் கொள்வாள்.

தட்டுகளில் தாறுமாறாகக் கிடந்த சேலைகளை அடுக்கிவிட்டு, வேண்டாத காகிதப் பைகள் - பிளாஸ்டிக் தாள்கள் எல்லாவற்றையும், குப்பைக் கூடையில் போட எடுத்தபோதுதான் கவனித்தாள். பழைய கைப் பை. சுந்தரமூர்த்தி வீட்டிலே தங்கியிருந்த காலத்திலிருந்து 'விடேன், தொடேன்' என்று வைத்துக் கொண்டு ஆண்டு அனுபவித்து, பிடி நைந்து, ஓரம் கிழிந்து, உடல் அழுக்காகி, உருமாறிப் பிசுபிசுவென்று கையில் ஒட்ட ரெக்ஸின் கரைந்து போன மிகப் பழைய பை. அதைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் எறியவேண்டும்.

உள்ளேயே ஏதாவது கடை பில்கள் இருந்து தொலைக்கப் போகிறது... அருவருப்புடன் திறந்தாள்.

எப்போதோ போட்டு வைத்த கொண்டை ஊசிகள்... அறுந்து போன பாசிமணி மாலை ஒன்று... பழுப்பாகிப் போன காகிதங்களில் லாண்டரிக் கணக்கு... களிப்பாக்குத் துண்டு ஒன்று... சினிமாப் பாட்டுப் புத்தகம்... பத்திரிகையிலிருந்து வெட்டி எடுத்த வேலை தேவை விளம்பரத்துண்டு என்ற பழைய குப்பையைத்

தரையில் வெறுப்போடு கவிழ்த்தபோது, 'டொக்'கென்ற சிறு சப்தத்துடன் மொசைக் தரையில் விழுந்து உருண்டு சற்று தூரம் அப்பால் தனியாக ஓடி நின்ற அந்த பால்பாயிண்ட் பேனாவைக் கண்டதும், பாம்பைக் கண்டவள் போல் நடுநடுங்கிப் போனாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. வேண்டாம் என்று ஒதுக்க முயன்றும், அந்த நினைவுகள் நீர் வீழ்ச்சியாக நெஞ்சை அடைக்க, கோபத்துடன் பேனாவை எடுத்துப் பையில் போட்டு, தெரு ஓரத்துக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு உள்ளே வந்தாள்.

பேனாவைக் குப்பைத் தொட்டியில் போட்டாகி விட்டது. ஆனால் அந்தப் பேனா தந்த பழைய நினைவுகள்... ஐயோ! அவளால் மறக்கவே முடியாதா? அட கடவுளே! மெய் பதற, முன்னறை சோபாவிலே சாய்ந்து கொண்டு விட்டாள்.

## 2

டெலிபோனில் அவள் பேசியதைக் கேட்டுவிட்டது போல அன்று இர்வு, தொலைக்காட்சியில் ஆங்கிலச் செய்தி அடங்கிய பின்னர் மழை சோவென்ற கோஷத்துடன் கொட்டத் தொடங்கியது. பரபரப்புடன் ஜன்னல் கதவுகள் அனைத்தையும் அடைத்தாள். படுக்கையில் கும்மென்ற இறுக்கத்தில் மூச்சு முட்டியது அவளுக்கு. லேசாக ஒரு ஜன்னலை மட்டும் திறந்து வைத்துக் கொண்டாள். தோட்டத்துச் செடிகள் காய்ந்து குச்சிகளாகிப் பரிதாபமாக நிற்குமளவுக்குப் பொசுக்கித்தள்ளிய வெயிலுக்கு ஒரு மாறுதலாகத்தான் இருந்தது அந்த மழை.

ஆனால் அவளுக்கு ஹோவென்று இரைந்து கொண்டு பொழியும் மழையைக் கண்டாலே பிடிக்காது.



மெல்லிய ஓசையுடன் மலர்களை வாரி வானம் தூவுவது போல - நிதானமாக ஜன்னல் கதவுகளைத் தட்டிக் கொண்டு சீராகப் பெய்யும் மழையில்தான் அவளுக்கு இன்பமான தூக்கம் வரும்.

தெருவை மெல்ல ஜன்னல் இடுக்கு வழியே பார்த்தாள். சில நிமிஷங்களில் முழங்காலைத் தொட்டுவிடும் போன்ற, தண்ணீர் வெள்ளமாக வழிய... வெளியே கொட்டு கொட்டென்று பொழிந்த மழை மீது அவளுக்கு வெறுப்பாக இருந்தது. தலையணை மீது சாய்ந்து கொண்டு விடிவிளக்கையும் அணைத்தாள். தொடர்ந்து காதைப் பிளக்கும் இடியோடு கூடிக் கோஷமிட்ட மழை தொடர்ந்து வெளியே ஊற்றிக் கொண்டிருந்தது.

தனிமையைக் கண்டு அனு சாதாரணமாக அஞ்சியதில்லை. ஆனால் அன்று காலையிலிருந்து தனிமை அவளைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

குழந்தைப் பருவத்து நினைவுகள் எல்லாம் பளிச்சென்று ஆழமாக அடிமனதில் அப்பிக் கொண்டு விடும். அவ்வப்பொழுது காலப்போக்கில்... ஏதோ ஒரு சமயம், எந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தாவது, தண்ணீரில் கிடக்கும் தாமரைக் கொடியை இழுப்பது போல... ஒன்றன் பின் ஒன்றாக இன்பதுன்ப நினைவுகள் எழுந்து... அப்பொழுதுதான் நடப்பன போன்ற பிரமிப்பை ஊட்டுவது இயல்பு.

அந்தப் பேனாவைப் பார்த்த பின்னர், சுந்தரமூர்த்தி வீட்டில் வாழ்ந்த நாளின் நினைவுகள் பல தொடர்ந்து துன்ப உணர்வுகளைத் தட்டி எழுப்பவே, அவள் மனம் நாள் முழுவதும் அமைதியில்லாமல் தவித்தது.

இப்போது கொட்டிக் கொண்டிருக்கும் மழை - அந்தப் பழைய நாட்களை நினைப்பூட்டி அவளது உறக்கத்தைக் கலைத்து, மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

மித்திரனின் குழந்தைக்குத் தாயாகப் போகும் நினைவில் - வருங்காலத்தைப் பற்றிய கற்பனையில் கரைந்து உறங்க வேண்டியவள் - கடந்த காலத்துக் கசப்பான நினைவுகளில் நீந்திக் கொண்டு நித்திரையில்லாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அவளுக்கு வயது பத்து. நினைவு தெரிந்த நாளிலிருந்து அவளுக்குத் தாய் ஒருத்தியைத்தான் தெரியும். பத்து மாதக் குழந்தையாக அவள் இருந்த போது அவளையும் அம்மா அலமேலுவையும் விட்டு மாயமாக மறைந்து போன அப்பா உயிருடன் இருக்கிறாரோ - செத்துப் போனாரோ என்று தெரியாத நிலை. அம்மா அவர் உயிருடன் இருப்பதாகத்தான் நம்பினாள் - அந்த நம்பிக்கையின் பயனாக, பூவும் பொட்டுமாக, கழுத்தில் புரண்ட அழுக்குத் தாலிச் சரடுமாக அவள் சுமங்கலியாகவே காட்சி தந்து கொண்டிருந்தாள். அலமேலுவுக்குக் கையெழுத்து மட்டுந்தான் போடத் தெரியும். தட்டுத்தடுமாறிப் படிப்பாள். அந்நிலையில் கைக் குழந்தைக்காரிக்கு என்ன வேலை கிடைத்துவிடும்? அலுவலகத்திற்கு வேலைக்குப் போகும் இரண்டு பெண்களின் வீட்டில், சமைத்து வைத்துவிட்டு வரும் பாதிநேரச் சமையற்காரியின் வேலைதான் கிடைத்தது. இரண்டு வீட்டவர்களும் தயவாகத்தந்த மிஞ்சிய முதல் நாள் சோற்றையும் குழம்பையும், அலமேலு தனது அலுமினிய டிபன் செட்டில் அடைத்துக் கொண்டு ஓடிவந்து பள்ளிக் கூடத்திலிருந்து பசியோடு வரும் மகளுக்கு அவசரமாக அடுப்பை மூட்டி அதைச் சூடாக்கி, தட்டில் போட்டு, கலந்து தன் கையாலே ஊட்டி விடுவாள். சில சமயங்களில் அந்தச் சோறும் குழம்பும் இரண்டு பேருக்கும் போதாமல் போய்விடுவதுமுண்டு.

''நீ சாப்பிடுடா கண்ணு. வளர்கிற குழந்தை... நல்லாபடிச்சு, பெரிய பட்டமெல்லாம் வாங்கி - பெரிய வேலையில் சேரணும். அதுக்கு உடம்பிலே தெம்பு வேணாம்?'' தழதழப்பாள் அம்மாள்.



தான் பட்டினி கிடந்து தன்னை அன்போடும் ஆதரவோடும் வளர்க்கிறாள் தாய் என்று புரிந்துகொள்ள முடியாத பேதைச் சிறுமி அனு, அப்போது.

மித்திரனுக்குப் பரோட்டா என்றால் மிகவும் பிடிக்கும். சில இரவு சாப்பாட்டுக்கு அவனுக்காக அவள் பரோட்டா செய்வது உண்டு. நெய் மணக்கும் பரோட்டாவைச் சுடச்சுடப் பரிமாறி, காரசாரமான சப்ஜியையும் கணிசமாகத் தட்டில் வைப்பாள். அப்போது அம்மா அலமேலுவின் ஞாபகம் வரும்.

சுந்தரமூர்த்தியின் வீட்டிலே - சமையல்காரியாக அம்மா வேலை பார்த்துக் கொண்டு அந்தப் பெரிய தோட்டத்து மூலையில் சிதிலமாகி விட்டிருந்த அந்தப் பழைய ஓட்டுவில்லை அவுட்ஹவுஸிலே வாழ்ந்த காலத்தில், ஹாஸ்டலிலிருந்து வார விடுமுறைக்கு வரும் பெண்ணுக்கு அவள் சுந்தரமூர்த்தி வீட்டில் சுட்டுப்போட்ட பரோட்டாவில் ஒன்றைக் கேட்டு எடுத்து வந்து, சூடு ஆறுமுன் ஓடி வந்து, தட்டில் வைத்துக் குழம்போடு பரிமாறுவாள்.

''சாப்பிடும்மா கண்ணு - இந்த அரை வருஷப் பரீட்சையிலே நல்ல மார்க்கு வாங்கினாப்பல முடிவிலும் வாங்கிடணும். நல்லா படிம்மா... ஹாஸ்டலிலே சாப்பாடு வாய்க்கு ருசியா கிடைக்குதோ என்னவோ... வயசுப் பெண்ணை ஒரு பக்கம் பத்திரமா விட்டு படிக்க வச்சாதான் எனக்கு நிம்மதியா வேலை செய்ய முடியும்'' என்பாள் கனிவு பொங்கும் குரலில்.

ஞாயிறு மாலை அன்று அவள் திரும்ப ஹாஸ்டலுக்குப் புறப்படும்போது அலமேலுவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு விடும். எங்கேயோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் மகள் தன்னைப் பிரிந்து போவது போன்றதொரு திகைப்புடன் கூடவே பஸ் நிலையத்தில் பழியாக வந்து கால் கடுக்க நிற்பாள்.

''பத்திரம் - சிநேகிதிகள் சொன்னாங்க - அது, இதுன்னு தப்பு தண்டா காரியத்தை ஏதும் செஞ்சுடாதேம்மா... பத்திரம், பத்திரம்?'' ஆயிரம் பத்திரங்களைச் சொல்லித்தான் அனுப்பி வைப்பாள்.

புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு நகர்ந்தோடும் பஸ்ஸைப் பல தடவை திரும்பிப் பார்த்தபடிச் செல்லும் அம்மாவை நினைத்து அவள் மனம் பாகாய்க் கரைந்து போகும்.

பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழ, சுந்தர மூர்த்தி வீட்டில், மாடாக உழைக்கும் அம்மாவை - அவள் படித்துச் சீக்கிரம் ஒரு வேலை தேடிக் கொண்டு அமைதியாக வைத்துக் காப்பாற்ற வேண்டும் எனப் பலமுறை நினைத்துக் கொண்டதுண்டு.

ஆனால் அவளது ஆசை நிறைவேறவேயில்லை. பட்டப் படிப்பு முடிந்ததும் - முதல் வகுப்பில் தேர்ந்து... தங்கப் பதக்கம் வாங்கிய பெருமைக்குரிய மாணவியாக அவள் வெற்றி வாகை சூடியதை, அவளதுஅருமைத் தாயார் பார்க்கவில்லை. இரத்த அழுத்தம் அதிகமாகி, மூளையில் இரத்தக் குழல் வெடித்து, மயக்கமான நிலையில் அவள் ஒரு நாள் இறந்து போனாள்.

தலையில் தொப்பியும் கருப்புக் கோட்டுமாக, சாரிசாரியாக நின்ற பெண்களுடன் - பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட அன்று - அவள் உடுத்திக்கொண்டு கண்ணாடி முன் பார்த்துக் கொண்டபோது...? கட்டுப்படுத்த முடியாது 'ஓ' வென்று அழுதுவிட்டாள்.

தங்களது குழந்தைகளின் வெற்றியைப் பார்த்துக் களிக்கப் பெற்றோர்களும்... அந்தப் பட்டமளிப்பு விழாவில் வேடிக்கை பார்க்க வந்து ஆவலோடு காத்திருந்தனர். அத்தனை காலம் அந்தக் காட்சியைக் காண ஆசைப்பட்டு அரும்பாடுபட்ட அவளது அன்னைதான் அங்கே இருக்கவில்லை.



மித்திரனுக்குப் பரோட்டாவைப் பரிமாறும் போதெல்லாம் அம்மாவின் நினைப்பு அவள் தொண்டையை அடைத்துவிடும்.

''ஏன் நீ வெறும் மோரு சோறு மட்டும் சாப்பிடறே? பரோட்டா தின்னால் உடம்பு ஊதிடும்னு பயமா?'' லேசாக அவள் கன்னத்தைக் கிள்ளி விளையாடுவான் மித்திரன்.

காசிக்குப் போனவர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஒரு காயோ, பழமோ ஏதோ ஒன்றை உணவில் பின்னர் ஒதுக்கி விடுவதாகச் சங்கல்பம் செய்து கொள்வார்களாம்.

பட்டமளிப்பு விழாவிற்குப் பின்னர், அவள் பரோட்டா சாப்பிடுவதை நிறுத்திவிட்டிருந்தாள். அம்மாவின் நினைப்பை மிக அழுத்தமாக உணர்த்திய அந்த உணவுப் பொருளை, அவள் அம்மாவின் ஞாபகார்த்தமாக, சாப்பிடாமல் ஒதுக்கி விட்டிருந்தாள்.

''வற்புறுத்தாதீங்க. எனக்கு இதைச் சாப்பிடப் பிடிப்பதில்லை -'' மறுத்து விடுவது வழக்கம்.

கடபுடவென்று வானம் உக்கிரமாக இடி முழக்கியது. பளிச் பளிச்சென்று கண்ணைப் பறித்த மின்னல், ஜன்னல் திரையை ஊடுருவிக் கொண்டு உள்ளே பாய்ந்தது. மீண்டும் மழை 'சோ' வென்ற ஓசையுடன் பொழியத் தொடங்கவே, அவள் முனகிக் கொண்டு படுக்கையில் புரண்டாள். நெஞ்சிற்குள் அந்தப் பயங்கர நினைவு திடீரென்று எழுந்து புரண்டது.

இரண்டு வீடுகளில் சமைத்துப் போட்டும் பற்றாக் குறையில் திண்டாடிய அம்மா, அப்பொழுதுதான் சுந்தரமூர்த்தியின் வீட்டிலும் காலை வேளை மட்டும் சமைத்துக் கொடுக்க ஒப்புக் கொண்டிருந்தாள்.

பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்த அந்தப் பங்களா ஒரு பெரிய தோட்டத்திற்குள் வேப்ப மரங்கள் காடாகச் சூழப் பொதிந்து

கிடந்தது. சற்றுத் தொலைவில் இசக்கியன் குப்பத்தில்தான் அவளும் அம்மாவும் ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தனர். பள்ளிக்கூடம் அருகிலிருந்தால் அம்மா அலமேலுவிற்கு அந்த இடம் வசிக்க சௌகர்யமாக இருந்தது. ஆனால் - அமைதியிருக்கவில்லை.

சிறு குழந்தையான அவளுக்கு, அப்போது எதுவுமே புரியவில்லை. இருட்டு முன் டிபன் செட்டுடன் ஓட்டமும், நடையுமாக அம்மா ஏன் இப்படிப் பேயைக் கண்டது போல் ஓடி வராங்க? வந்ததும் குடிசையின் கதவை ஓங்கிச் சாத்திக்கொண்டு, பதைபதைப்புடன், சுவரிலே சாய்ந்து முகத்தில் வழியும் வியர்வையைத் துடைத்தபடி மெல்ல ஜன்னல் வழியே பல முறை எட்டிப் பார்க்கிறாங்க? விழிப்பாள் அவள்.

''அம்மா! என்னம்மா? ஏன் எப்படியோ இருக்குறீங்க'' - தாயின் தோளைப் பிடித்துக் கேட்டாள்.

''வர்ற வழியிலே இருளன் கோயில் இருக்குது பாரு. அதை இருட்டுவதுக்கு முன்னால் தாண்டி வந்துடணும். இல்லாட்டி சனி பிடிச்சுக்கும்னு சொல்லுவாங்க. இருட்டிப் போயிட்டுதா - சனி பிடிச்சுக்கப் போவுதேன்னு பயம் - ஓடி வந்தேன்-'' அம்மா திணறுவாள்.

அன்று மாலை அவள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த போதுதான் பார்த்தாள். குடிசையிலிருந்த அவர்களது சாமான்களையெல்லாம் அம்மா அப்புறப்படுத்தி விட்டிருந்தாள். எஞ்சியிருந்தது ஒரு சிறு துணி மூட்டை.

டிபன் செட்டை அவசரமாகத் திறந்து வைத்து - ''சாப்பிடு, ஜல்தி நாம கிளம்பணும்'' என்றாள் அம்மா. பசியால் சுருண்டு கொண்டிருந்த வயிற்றை முதலில் கவனிக்க அனு, கையைக் கழுவிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.



அமைதியில்லாது அலமேலு அடிக்கடி ஜன்னல் வழியே வெளியே பார்ப்பதைக் கண்டு அவளுக்கு விந்தையாகத் தானிருந்தது.

''என்னம்மா பாக்குறீங்க?'' - குழம்புச் சோற்றை வாயில் அடைத்துக் கொண்டு கேட்டாள் மகள்.

''மழை பெய்வது போலத் தோணுது. அதுக்குள்ளே கிளம்பிடணும்'' - சோற்றைத் தின்று விட்டு டிபன் செட்டைக் கழுவி - மூட்டைக்குள் அம்மா பத்திரப்படுத்துவதற்குள் வானம் பின்னும் கறுத்துக் குமுறத் துவங்கியது.

கூரையைத் தூக்கிவிடும் போன்ற பேய்க்காற்று வேறு. அலமேலு யோசிப்பதற்குள் 'சோ'வென மழை பெரும் இரைச்சலுடன் கொட்ட ஆரம்பித்தது. குப்பத்தின் ஆரம்பத்திலே தெரிந்த முதல் குழல் விளக்குப் பளிச்சென்று எரியத் தொடங்கியதைக் கண்ட அம்மா, மூட்டையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு மகள் கையைப் பிடித்துக் கொண்டு வெளியே புறப்பட்டாள்.

''மழை கொட்டுதும்மா'' - மகள் சிணுங்கினாள்.

அலமேலு பிடிவாதமாக, முழங்கால் மட்டும் வெளியே ஓடிய தண்ணீரில், கோபமாக மகளைப் பிடித்து இழுத்த படி, கொட்டும் மழையில் தொப்பலாக நனைந்தபடி நடக்க முயன்றாள்.

எதிரே சற்றுத் தொலைவில் தெரிந்த குடையைக் கண்டதும் அரண்டு போனவளாய், அருகில் தெரிந்த குடிசைத் தாழ்வாரத்தில், மகளைச் சேர்த்துப் பிடித்தபடி பதுங்கிக் கொண்டாள்.

மழை சற்று ஓய்ந்து வானம் வெறுமையாக, இடியுடன் உறுமியது. சற்றுத் தூரத்தில் ஒலித்த கடுமையான குரல் தெளிவாக அவளுக்கும் கேட்டது.

''ஏய்! அலமேலு! கதவைத் திற மரியாதையா - இல்லே கதவை எட்டி உதைச்சா - உன் குடிசை கீழே உழுந்திடும். என்கிட்டய்யா உன் சால்சாப்பு''- ஆக்ரோஷமான ஆண் பிள்ளையின் குரல்!

மகள் பேசாதபடி அவள் வாயை இறுகப் பொத்தினாள் தாய். வெட வெடவென்று நடுங்கியபடி உட்கார்ந்திருந்தாள் என்பது அவளுக்குப் புரிந்தது. நல்லவேளை அந்த வீட்டிற்குடையவள் உள்ளே மழைக்காக முடங்கியிருந்ததால், இவர்கள் வாயிலருகில், பதுங்கியிருப்பதை எட்டிப் பார்க்கவில்லை.

அன்றிரவு நெடு நேரம் அவர்களிருவதும் அப்படியே ஒண்டிக் கொண்டிருந்தனர். பிறகு - துணிவைத் திரட்டிக் கொண்டு - அலமேலு தன் மகளை அழைத்துக் கொண்டு மழையில் நனைந்த சேலை தடுக்க, மகள் தடுமாறியபடி நடக்க மூன்று கிலோமீட்டர் தூரத்திலிருந்த சுந்தரமூர்த்தியின் பங்களா கேட்டை அணுகி... கம்பியைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினாள்.

''அப்பவே வரேன்னு சாமான்களைக் கொணர்ந்து வச்சிட்டுப் போனவ இத்தனை நேரம் கழிச்சா வருவே...'' கோபத்தோடு இரைந்தபடிதான் சுந்தரமூர்த்தி அவர்களை வரவேற்றார்.

''மழை வந்திடுச்சிங்க - வர முடியலை... பிள்ளை பள்ளிக்கூடத்திலிருந்து வர நேரமாயிடுச்சி. அது வேற தடங்கல்... மன்னிச்சுக்கோங்க...'' கூறிவிட்டு, மகளுடன் தோட்டத்தின் கோடியிலிருந்த அவுட்ஹவுசுக்கு விரைந்தாள்.

மாலையிலேயே வந்து இடத்தைப் பெருக்கி, சாமான்களை ஒரு பக்கம் ஒழுங்காக வைத்துவிட்டிருந்தாள். மங்கலாக எரிந்த மின்விளக்கடியில் பாயை விரித்து போட்டு விட்டு, ஈர உடையை மாற்றிக் கொண்டு, தாயும், மகளும் படுத்தனர்.



புதிதாக - இடமாற்றம் செய்து கொண்டு, அந்த வீட்டின் வேலைக்காரி - சமையல்காரி என்று எல்லா வேலைகளையும் அம்மா ஏற்றுக் கொண்டதன் காரணத்தைப் பின்னர்தான் அவள், பெரிய பெண்ணாக வளர்ந்து உலக விவரம் புரியும் சமயம் தெரிந்து கொண்டாள்.

இசக்கியன் குப்பத்திலே ரவுடியென்று பிரசித்தி பெற்ற காசிலிங்கத்தின் கண்களில் அலமேலு பட்டு விட்டிருந்தாள். புருஷன் இல்லாதவள், ஆனால் பூவும் பொட்டுமாக, இளமையின் பளபளப்பிலே ஒரு சின்னக் குழந்தையுடன் தனியாக வசிக்கும் இவளை... நம்முடையவளாக்கிக் கொண்டு விட்டால்?

காசிலிங்கம், அலமேலுவிடம் ஜாடையாகச் சொல்லிப் பார்த்தான். அவளைக் கடைசிவரை, வைத்துக் காப்பாற்றுவதாகச் சத்தியம் செய்து கூடக் கொடுத்தான். கடைசியில் பயமுறுத்த ஆரம்பித்தான்.

காசிலிங்கம் என்றாலே அந்தக் குப்பமே பயத்தில் அலறும். அவனது விரோதத்தை அவ்வளவு எளிதில் சம்பாதித்துக் கொண்டுவிட முடியுமா?

சாக்குப் போக்குகள் சொல்லிக் காலத்தைக் கடத்தப் பார்த்தாள். ஆனால் சண்டாளன் அசைந்து கொடுப்பதாக இல்லை. அன்று அவளுடைய வீட்டிலேயே குடியேறத் திட்டமிட்டு விட்டு, வரப்போவதாக அறிவித்திருந்தான்.

''பொழுது சாஞ்சதும் வருவேன். உன் ஆட்டம் நம்பகையில் செல்லாது. கவனம் இருக்கட்டும்'' - மிரட்டி விட்டுப் போயிருந்தான்.

ஓடிப்போன புருஷனுக்கு உத்தமியாக வாழ்ந்து, தன் இளமை உணர்வுகளை அடக்கிக்கொண்டு, வைராக்கியமாகப் பாடுபட்டு மகளைப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டு

வரவேண்டுமென்ற லட்சியம் அலமேலுவுடையது. அவள் பாதை நடுவே பழிகாரன் குறுக்கிடுவதைக் கண்டு பதைத்துப் போய்த்தான் சுந்தரமூர்த்தியின் மனைவியிடம் முறையிட்டு அவர்களிடம் முழுநேர வேலைக்காரியாகத் தஞ்சமடைந்து விட்டாள்.

அடிமட்டத்துக் குப்பத்து மக்களிடையே காசிலிங்கம் ஒரு வெளிநாய் என்றால்... சுந்தரமூர்த்தி தம்பதியர், மேல் மட்டத்து மக்களிடையே பெரும் முதலைகள்.

நெருப்புக்குத் தப்பி, நீருக்குள் மூழ்கிய கதை. அலமேலுவின் புத்திக்கு அப்போது அதெல்லாம் துல்லியமாகத் துலங்கவில்லை.

தனக்கும் குழந்தைக்கும் இடம் கொடுத்து ஆதரவளித்து, வேலையும் சம்பளமும் தந்து சோறு போட்டுக் காக்கும் மகாராஜன் சுந்தரமூர்த்தி என்று, கடவுளுக்கும் அடுத்த ஸ்தானத்திலே அமர்த்தி வாயாரப் புகழ்ந்து, மனதால் வணங்கிக் கொண்டிருந்தாள்.

சுந்தரமூர்த்தி தம்பதிகள் ஆடம்பரமாக, கார், ஆட்கள் என்று வசதியாக வாழ்ந்தனர். குழந்தைகள் கிடையாது என்ற ஒரே குறைதான். அதை உணர்ந்தவர்கள் போலவே அவர்கள் காட்டிக் கொண்டதில்லை.

உயர்நிலைப்பள்ளிப் படிப்புவரை அனு அம்மாவுடன் அந்தப் பழைய அவுட் ஹவுசில்தான் தங்கி இருந்தாள். அருகிலிருந்த பள்ளிக்குச் சென்று வந்தாள். நல்ல மதிப்பெண்களுடன் தேறி நகரத்தில் இருந்த பிரபலமான பெண்கள் கல்லூரியில் உபகாரச் சம்பளத்துடன் சேர்ந்த பின்னர், அவள் வெகுதூரம் பஸ் பயணத்தைத் தவிர்க்க, நன்கு படித்து மேற்படிப்பைத் தொடர... என்ற பல காரணங்களால் ஹாஸ்டலிலேயே தங்கினாள். அம்மா சம்பாதித்த அத்தனை பணமும் அவள் படிப்பிற்குச் செலவானது. அத்துடன் கடன் வாங்கியும் செலவழித்திருந்தாள்.



எல்லாம் பிறகுதான் அனுவிற்குத் தெரிய வந்தது. அம்மாவிற்கு உடல்நிலை அவ்வளவு சுகமாக இல்லாது போகவே, அவளால் முன்போல் எல்லா வேலைகளையும் செய்ய முடியவில்லை. கல்லூரிப் படிப்பு முடிந்து வேலை தேட வீட்டோடு இருக்க வேண்டிய நிலை வந்தபோது அம்மாவிற்குப் பதில் அனுவே அவர்கள் வீட்டு வேலைகளைச் செய்து கடன்பட்ட தொகையைச் சிறிது சிறிதாகக் கழிக்க நேர்ந்தது.

சுந்தரமூர்த்தி தம்பதியரின் நடவடிக்கை பூராவையும் அலமேலு புரிந்து கொண்டு விட்டிருந்தாள். மகளிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட நினைத்தாள். உடம்புக்கு முடியாது அடிக்கடி நோயாகப் படுக்கத் தொடங்கி விட்டாள்.

''சீக்கிரம் ஒரு வேலையைத் தேடிக்கிட்டு - நீ... உன் சொந்த சம்பாத்தியத்தில் சுதந்திரமாக வாழ முயலவேணும் - யாரையும் நம்பாதே'' என்பாள்.

பி.எஸ்ஸி பரீட்சை முடிந்த சமயம், ''பட்டம் வாங்கின கோலத்தோட உன்னைப் பார்க்கணும்'' என்றாள். ஆனால் அன்று இரவே இரத்த அழுத்தம் அதிகமாகி மயக்கம் போட்டு விழுந்தவள், நினைவு திரும்பாமலே போய்விட்டாள்.

''கவலைப்படாதேயம்மா! நாங்கள் இருவரும் உன் வளர்ப்புப் பெற்றோர்கள்னு நினைச்சுக் கொள்ளு - எங்களுக்குக் குழந்தையா, குட்டியா - இனிமேல் நீ ஏன் இந்த அவுட்ஹவுசில் அடைபட்டுக் கிடக்க வேணும். பங்களாவில் எத்தனை அறைகளிருக்கு... அதில் ஒண்ணில் நீ இருந்துக்கோ - வயசுக் காலத்தில் எங்களுக்கு நீ துணையாகவும், உதவியாகவும் இருப்பே'' - சுந்தரமூர்த்தி அனுதாபப்பட்டார்.

''இளவயசுப் பொண்ணு... தன்னந்தனியா இருப்பது ஆபத்து... எங்களோட வளர்ப்பு மகள்னு நாலு பேர் நினைச்சா உனக்கு மதிப்புதானே?''- சுந்தரமூர்த்தியின் மனைவி வேதவல்லி வேப்பிலை அடித்தாள்.

அனுபமாவிற்கு நன்றி உணர்வு அதிகம் உண்டு. வேளைக்குச் சோறு போட்டு, இருக்க இடமும் பாதுகாப்பும் தந்த சுந்தரமூர்த்தி தம்பதியருக்கு, தன் உடலால் உழைத்து ஈடு செய்ய விரும்பினாள்.

தக்க வேலை கிடைக்கும்வரை வயதாகிக் கொண்டிருக்கும் வேதவல்லி அம்மாளுக்கு, சமையல்காரியாக - வீட்டு வேலைக்காரியாக முகம் கடுக்காது வேலை செய்தாள்.

பொன் துடைத்த குந்துமணி அளவு தங்க நகை அவள் மேல் இருக்கவில்லை. அம்மா அவள் படிப்பிற்காகக் கணிசமான கடனை வைத்துவிட்டுப் போயிருந்தது வேறு. அந்த நிலையில் அவள் அப்படி உழைக்கத்தான் கடமைப்பட்டிருந்தாள்.

அனுபமா படித்து விட்டோம் என்ற கர்வம் ஏதும் இல்லாமல் பணிவுடன் வேதவல்லியின் அடிமையாக உழைத்தாள்.

காசிலிங்கத்தின் பிடியிலிருந்து தப்ப அம்மா ஒரு மழை இருட்டில் கனவேகமாகக் குடிசையைக் காலி பண்ணிக் கொண்டு ஓடினாள்.

மகளோ ஹரிநாதனின் பிடியிலிருந்து தப்ப இரவோடு இரவாக இரயில் பிடித்து வேறு ஊருக்கே ஓட வேண்டி வந்ததே!

தனியான பெண்கள் என்றதினால்தானே துரத்திவரும் ஓநாய்களிடமிருந்து தாயும், மகளும் அப்படி ஓடினார்கள்?

எத்தனையோ முறை அவள் மித்திரனிடம் இவைகளை யெல்லாம் மனம் விட்டுப் பேசத்தான் விரும்பினாள்.

அன்பும், பண்புமான அவனிடம் அவள் எதையும் ஒளித்து வைக்க விரும்பவில்லை. ஆனால் மைத்ரேயி அம்மாள் திருமணத்திற்கு முன்னர் அவளைத் தனியே அழைத்துச் சொல்லி விட்டாள்.



''சலனமில்லாத ஆழமான குளத்தின் நீர்ப்பரப்பில் ஒரு சிறு கல்லைத் தூக்கிப் போட்டதுபோல ஆகும். ஆண்பிள்ளை எத்தனைதான் அன்பான கணவனாக இருந்தாலும் துளியளவு சந்தேகம் மனைவி மீது ஏற்பட்டுவிட்டாலும் போதும். பிறகு வாழ்க்கை இருவருக்குமே நரகம்தான். என்கிட்ட சொன்ன அந்த விவரங்களையெல்லாம் மித்திரன் கிட்ட சொல்லத் தேவையில்லை. அவன் உன்னை விரும்புகிறான். நீ அவனை மணக்க ஒப்புக் கொண்டாய். இரண்டு பேருமே இன்றும், நாளையும் எப்படி வாழ வேணும் என்று சிந்தியுங்கள். அது போதும். நேற்று பத்தின விவரமே வேண்டாம். புரியுதா?'' - எச்சரித்தாள்.

வயதிலும், சமூகப்பணியிலும் உலக அறிவிலும், அவளைவிட முதிர்ந்த மைத்ரேயி அம்மாளின் அறிவுரைகளை அவள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் இப்போது நேற்றைய நினைவுகள் அவளை அலைக்கழிக்கின்றனவே?

மழை இன்னமும் பெய்து கொண்டிருந்தது. ஆனால் லேசாக மனதிற்கு இதமாகப் பெய்தது. உறக்கம் வராத அவள் எழுந்து விளக்கைப் போட்டாள்.

மேஜைமேல் தன் கண் எதிரே அன்று மாலை அவள் கொண்டு வந்து வைத்துக்கொண்ட அவர்களது திருமணப் படத்திலிருந்து மித்திரன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

கல்யாணமான பின்பு தேன்நிலவிற்கு அவளை அவன் காஷ்மீரத்திற்கு அழைத்துச் சென்றிருந்தபோது நன்றி உணர்வு மேலோங்கிய நிலையில் அவனிடம் கூறினாள்.

''குடிசையிலே வாழ்ந்துகிட்டிருந்த என்னைக் கோபுரத்திலே உயர்த்தி வச்சுட்டீங்க. இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைச்சிருக்கிறது உண்மைதானான்னு எனக்கே நம்ப முடியலை.''

மித்திரன் வேடிக்கையாகவும், வேதாந்தமாகவும் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவன். பல மொழிகளிலும் பரிச்சயம் உடையவன், கல்யாணத்திற்கு முன்னர் அவன் கேரளாவிலிருந்த பெரிய அலுவலகம் ஒன்றில் பல ஆண்டுகள் வேலை பார்த்து விட்டுச் சென்னைக்கு வேறு வேலைக்கு மாறிவிட்டிருந்தவன்.

**"ரெண்டு நாலு தினங் கண்டொருத்தனோ**
**தண்டிலேற்று நடந்துன்னதும் பவான் -**
**மாளிக முகளிளெறிய மன்னண்டே**
**தோளில் மாராப்பு கெட்டுன்னதும் பவான் -**
**கிருஷ்ண - கிருஷ்ண முகுந்தா ஜனார்தனா -**
**கிருஷ்ண - கோவிந்த நாராயணா ஹரே -**
**அச்சுதானந்த கோவிந்த மாதவா -**
**சச்சிதானந்த நாராயணா ஹரே"**

அவளது தோளைத் தழுவியபடி உரக்கப்பாடிக் கொண்டு ஷாலிமார் பூங்காவில் நடந்தான்.

''ரெண்டு நாளைக்கு முன் இருந்தவன் - இல்லாமல் போவதும் பகவான் சித்தம் - மாளிகையில் மன்னனாக வாழ்ந்தவன் சாதாரண மனிதனாகப் போவதும் அவன் கிருபைன்னு அர்த்தம். 'குடை நிழலில் குஞ்சரம் ஊர்ந்தோர், நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்'னு தமிழில் ஒரு பழம் பாடலில் சொல்லியிருக்கலையா? அதையேதான் ஞானப் பானையில் பூந்தானம் சொல்லியிருக்கார்.''

அவனது புத்தக அலமாரியில் பூந்தானம் மட்டும் அல்ல - ஔவையார் - உலகநாதர் - அதிவீரராம பாண்டியன் - கம்பர் - பாரதி - கலீல்ஜிப்ரான் - உமர் கயாம் - ஆஸ்கார் ஒயில்ட் - என்று எல்லோருமே இருந்தனர்.

வெறும் அலங்காரத்திற்காக அடுக்கி வைக்கப்பட்ட புத்தகங்கள் அல்ல. அவனது அறிவின் விருத்திக்காக அவன் வேண்டிச் சேகரித்துக் கொண்ட உற்ற நண்பர்கள் அவைகள்.



படித்தவன் - அறிவாளி - விவேகி - அன்பான கணவன் - அப்படிப்பட்ட கணவனுக்குத் தெரியாமல் -

சிரித்துக் கொண்டிருந்த மித்திரனைப் பார்க்கக் கூசியவள் போல விளக்கை அணைத்தாள். விழிகளில் நீர் புரண்டது. லேசாக விம்மினாள். வெளியே, மெல்ல மெல்ல, மழை பெய்தபடி இருந்தது.

## 3

இரவில் பூதமாக விரிந்து வேதனையையும் அச்சத்தையும் தந்த விஷயங்கள், மறுநாள் பளிச்சென்று வீசிய சூரிய ஒளியில் பனிபோல மாயமாயின. பலநாட்களுக்கு முன் நடந்தவை- அவள் ஏன் அவைகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும்?

மைத்ரேயி அம்மாள் அடிக்கடி அவளிடம் சொல்லி இருந்தாள். இன்று நிகழ்வதையும் நாளைக்கு நடக்கப் போவதையும் தீர்க்கமாகப் பார்த்து வாழ்க்கைப் பாதையில் நாம் முன்னேறத்தான், மனிதனுக்கு முன் பக்கமாக முகத்தில் இரண்டு கண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

''கடந்த காலத்தையே பார்த்து மனத்தைக் குழப்பிக் கொள்வதுதான் இயல்பு என்றால், கண்கள் முதுகுப் புறத்தில் அல்லவா அமைக்கப்பட்டிருக்க வேண்டும்''- மைத்ரேயி அம்மாளின் தத்துவத்தை எண்ணி அவள் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

மித்திரனுடன் அவள் இனிமையாக- சுகமாக - வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இப்பொழுது அவள் ஏன், அந்தப் பழைய வீண் கதைகளையே நினைத்தபடி, சிந்தனையில்

உழன்று...? நினைப்பை உதறினாள். வீட்டு வேலைகளில் முழு கவனத்தையும் செலுத்தினாள்.

சமையலறை அலமாரிகளைச் சுத்தப்படுத்தினாள்; நிதானமாகக் குளித்தாள்; மெதுவாகச் சமைத்தாள். உணவை ரசித்துச் சாப்பிட்டாள். பகல் வேளையில் ஒரு குட்டித் தூக்கம் போட்டாள் -பின்னர் எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு-டீ சாப்பிட்டு விட்டுத் தோட்டத்தைச் சுற்றி வந்தாள். இருட்டத் துவங்கியதும் உள்ளே வந்து விரைவாக இரவுச் சாட்பாட்டை முடித்துக்கொண்டு தொலைக்காட்சியில் சினிமா பார்த்தாள்.

மறுநாள் கல்லூரியில் போதிக்க வேண்டிய பாடங்களைப் பற்றி... வேகமாகக் குறிப்புகள் தயாரித்துக் கொண்டாள். அதற்குள்...தூக்கம் கண்களை அழுத்தவே... தன்னையுமறியாது நன்றாகவே தூங்கிவிட்டாள்.

மறுநாள் விடிந்ததும் அவளுக்கு நிற்க நேரமிருக்கவில்லை. கல்லூரிக்கு கிளம்ப வேகமாக ஆயத்தமானாள்.

டிபன் டப்பாவைக் கைப் பைக்குள் போட்டுக் கொண்டு... ஜன்னல்களைச் சாத்திவிட்டு, காஸ் சிலிண்டரை நன்றாக மூடிவிட்டு, வாயிற் கதவைப் பூட்டியவள் ஓட்டமும் நடையுமாகப் பஸ் பிடித்து... கல்லூரிக்கருகே இறங்கி, மூச்சைப் பிடித்துக் கொண்டு நடந்து... அவள் வந்து சேர்வதற்குள்... 'அப்பாடா' என்று அலுப்பாகத் தான் இருந்தது.

''நான் ஒருத்தன் சம்பாதிக்கறது நமக்குத் தாராளமாகப் போதும். சொந்தவீடு இருக்கு. கம்பெனி காரும் இதர சலுகைகளும் இருக்கு. நீ ஏன் இப்படி வேலை செய்து கஷ்டப்படறே? வீட்டோட நிம்மதியா இருக்கலாமே'' -பலமுறை மித்திரன் சொல்லிவிட்டான்.

நல்ல வேலை. கொஞ்ச நாட்களுக்கு முன்னர்தான் நிரந்தரமாக்கப்பட்ட ஆசிரியர் பதவி. நல்ல சம்பளமும் கூட. சனி



ஞாயிறு லீவு, தீபாவளி, பொங்கல் போன்ற விடுமுறை நாட்கள். நீண்ட கால விடுமுறை வசதிகள்- ஒரு நாளைக்கு மூணு அல்லது நான்கு மணி நேரம்தான் வகுப்புகள். காலை எட்டு மணிக்குப் புறப்பட்டுப் போனால் மாலை நான்குக்கு வீடு வந்து சேர்ந்துவிடும் லட்டுப் போன்ற வேலையை அவள் ஏன் விடவேண்டும்?

அவள் சம்பாதிப்பதை அப்படியே பாங்கில் போட்டு வைத்தால் நாளைக்குக் குடும்பம் பெருகி விடும்போது... தாராளமாக எடுத்துச் செலவழிக்கலாமே! விவாதித்தாள்.

''இப்பவே சொல்லிவிட்டேன். குழந்தை ஒண்ணுக்கு நீ தாயானவுடனேயே- பிரசவ லீவிற்குப் பிறகு வேலையை விட்டுவிடணும் -குழந்தையை ஆயாகிட்ட கொடுத்துட்டு, வேலைக்குப் போக வேண்டிய அவசியமில்லை''- கண்டிப்பாக அவன் சொல்லி இருந்தான்.

''ஓ. கே. ஸார்... உங்க இஷ்டப்படியே செய்துடறேன். அதுக்கு இப்பவே பிடிச்சு நமக்குள்ள தர்க்கமேன்?'' -சிரித்து மழுப்பி விடுவாள்.

அந்த நிலை இப்போது வந்து விட்டிருந்தது. மித்திரன் விஷயத்தைக் கேள்விப்பட்டதும் என்னென்ன உத்திரவுகளை அமுலாக்கப் போகிறானோ!

ஓய்வு நாளையில்-அவள் தூங்க-தான் எழுந்து காப்பி பலகாரம் தயாரித்து வரும் ஆசாமி, இனி அவளைத் தினசரி சமைக்கக்கூட அனுமதிக்க மாட்டான். பஸ்ஸில் பயணம் செய்ய ஒப்புக் கொள்ளவே மாட்டான்.

ஒரு தலைவலி என்றாலே... ''இப்போ எப்படி இருக்கு?'' என்று நூறு முறை கேட்டுத் தொண தொணத்து விடுகிறவன், அவள் தாய்மையடைந்து விட்டதை ஒரு வியாதியைப்போலக் கருதி, ஆயிரம் கவலைகள் ஐயாயிரம் கேள்விகள் கேட்டு...ஐயோடா!

வகுப்பறையை நோக்கி வராந்தாவில் நடந்தவள் தனக்குள்ளே பெருமையும் மகிழ்ச்சியுமாகச் சிரித்தக் கொண்டாள்.

பிற்பகல் உணவின்போது - சாப்பாட்டறையில் அவள் டிபன் டப்பாவைத் திறந்தாள். அவசரத்தில் சாதத்தில் தயிரை ஊற்றிக் கலந்து கொண்டு வந்திருந்தாள்.

பக்கத்திலே உட்கார்ந்திருந்த கணக்கு ஆசிரியை- தன் டிபன் செட்டைத் திறந்தபோது கம்மென்று சீரக மிளகு ரச வாசனை பரவியது.

உடனடியாக அவளுக்கு அம்மாவின் நினைவு ஏற்பட்டு விட்டது. இந்தச் சமயம் அம்மா உயிருடன் இருந்தால்... அவள் தாய்மையடைந்திருப்பதைக் கேள்விப்பட்டு மகிழ்ந்திருப்பாளே... வாய்க்கு ருசியாக வகை வகையாகச் செய்து போடுவாளே?

அம்மா கைச் சாப்பாட்டிற்கோ அத்தனை ருசி. முருங்கைக்காய் சாம்பாரைச் சாப்பிட்டுக் கை கழுவி விட்ட பிறகும், கை மூணு நாள் மணக்குமே! அவளுக்குச் சீரக ரசமும், சோறும் சாப்பிட வேண்டும் போல ஆசை ஏற்பட்டது.

''இந்த சமயத்தில் பெண்களுக்கு என்னென்னவோ சாப்பிட ஆசைகள் தோன்றும். எனக்குத் தெரிஞ்ச ஒரு பேஷண்ட்டுக்கு இலந்தப் பழம் திங்கணும்னு ஆசை வந்திட்டது. ஸீஸன் இல்லாத காலத்தில் பழத்தைத் தேடிக் கண்டுபிடிக்க அவள் கணவன் அலையாய் அலைந்தான். பிறகு இலந்தம் வடையை வாங்கித் தின்று அந்த ஆசையைத் தீர்த்துக்கொண்டாள்! உனக்கு ஏற்படக்போகும் ஆசையை மித்திரன் எப்படிச் சமாளிக்கப் போகிறாரோ'' - டாக்டர் ரேவதி பரிகசித்திருந்தாள்

இரண்டு நாட்களாக அவளுக்கு என்னென்னவோ சாப்பிட ஆசையாகத்தான் இருந்தது. பப்புளிமாஸ் பழம் ஒன்றை உரித்து அதன் சுளைகளை உதிர்த்து ஒரு கிண்ணம் நிறைய வைத்துக்கொண்டு அள்ளி அள்ளித் தின்ன வேண்டும் என்றதொரு



மோகம்! தயிர் சாதத்தை எடுத்துச் சிறிது வாயில் போட்டுக் கொண்டவளுக்குக் குமட்டிக் கொண்டுவந்தது.

''காலை வேளையில் எழுந்திருக்கும்போது தலை சுற்றும், மயக்கமாக இருக்கும். பிடித்தமான பொருளைக்கூடச் சாப்பிடப் பிடிக்காது, வயிற்றைக் குமட்டும். பயப்படாதே. தானே எல்லாம் சரியா விடும்'' என்று டாக்டர் ரேவதி அவளுக்குத் தைரியம் சொல்லி அனுப்பி வைத்தாள்.

ஆனாலும் இது சமயம் மித்திரன் ஊரில் இல்லாதது அவளுக்குப் பெரும் குறையாகத்தான் இருந்தது.

''சாதம் பிடிக்கலையா? ரொட்டியை டோஸ்ட் போட்டுத் தரவா?'' - என்று ஒரு முறை அவளுக்குக் காய்ச்சல் வந்தபோது, மித்திரன் அவளுக்குப் பணிவிடை செய்யத் துடித்துப் போனாள்.

மகிழ்ச்சியான சங்கதியைத் தெரிந்து கொண்டதும் அவளைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தாங்கத் துவங்கி விடுவானே! குழந்தை என்றால் அவனுக்குக் கொள்ளை ஆசையாச்சே?

டிபன் டப்பாவை எடுத்துச் சென்று குப்பைக் கூடைக்குள் கவிழ்த்தாள். குழாயில் டப்பாவைக் கழுவித் துடைத்துப் பைக்குள் போட்ட பிறகும் வயிற்றுக் குமட்டல் நிற்கவில்லை. டாக்டர் ரேவதியின் ஆலோசனைப்படியே எதிர் பக்கத்துக்கடை ஒன்றுக்குச் சென்று சில்லென்று குளிர் பானம் வாங்கி அருந்தினாள். அந்த உணர்வு சில நிமிஷங்களில் அடங்கியதும் - தன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டாள்.

கல்லூரியில் - பாட போதனையின்போது நடுவில் கிடைக்கும் இடைவேளைகளில்தான் அவள் எப்பொழுதாவது தன் தோழி சரயூவிற்குக் கடிதம் எழுதி, கல்லூரி வாயிலில் நின்ற தபால் பெட்டியில் சேர்ப்பது வழக்கம்.

அவளது தோழிகளின் வட்டத்திலே ஹைதரபாத்திலிருந்த சமயம்... மைத்ரேயி அம்மாளின் தூரத்து உறவுக்காரப் பெண்ணான சரயூவிடம் அவள் மிக நேசத்துடன் பழகினாள்.

அனுபமாவின் திருமணத்தின்போது இரண்டாவது குழந்தையை எதிர்பார்க்கும் தாய்மை நிலையிலிருந்தாள். இரண்டாவது பெண் குழந்தை- உமா என்று பெயர் வைத்திருக்கிறேன் என்று கடிதம் போட்டிருந்தாள்.

வேலைகளின் நெருக்கடி காரணமாக இருவரும் கடிதம் எழுத முடிவதில்லை. எப்போதாவது சரயூ கடிதம் எழுதினால் கட்டாயம் கடிதத்தின் முடிவில் அந்தக் கேள்வி இருக்கும்...

இன்னமும் நீங்கள் இருவரும்... 'நாம் இருவர்தானா?' எப்போது நம்மைப்போல் ஒருவர்-என்ற நல்ல செய்தி கிடைக்கும்? அதை ஆவலாக எதிர்நோக்கும்...

உன் அன்புத் தோழி,
சரயூ

அன்று அவளுக்கு இடைவேளையில் கொஞ்சம் அவகாசம் கிட்டியது. கைப்பையில் முன்னேற்பாடாகத் தபால் உறை- எழுதக் கடிதம் இத்யாதி வஸ்துகளுடன் தான் வந்திருந்தாள்.

நீண்ட கடிதம் எழுதப் பொழுது இருக்கவில்லை. சுருக்கமாக எழுதி முடித்தவள், ''நீண்ட நாட்களாக நீ எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்த இன்பச் சேதியை உனக்கு மட்டும் சொல்கிறேன்- இன்னும் உன் சகோதரன் மித்திரனுக்குக் கூடத் தெரிவிக்கவில்லை. நீ விரைவில் அத்தையாகப் போகிறாய்!'' -புன்னகைத்துக்கொண்டு, கடிதத்தை மடித்து உறையிலிட்டு ஒட்டினாள். கைப்பையில் கவனமாக எடுத்துவைத்தாள். மறக்காமல் போகும் வழியில் தபால் பெட்டியில் சேர்த்து விட்டாள்.



மித்திரன் அன்றிரவு மறுபடியும் அவளைத் தொலை பேசியில் அழைத்தான்.

''அலுவலக வேலை முடிவடையவில்லை. அதனால் நான் இன்னும் ரெண்டு நாள் பொறுத்துத்தான் ஊர் திரும்ப முடியும் போலிருக்கு. உன்னைத் தனியே விட்டுட்டு -இங்கே வந்து உட்கார்ந்திருக்கேனேன்னு வருத்தமாக இருக்கு...''

அவளுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. அருகில் இருக்கவேண்டும் அவன் இப்போது என்று அவள் ஆசைப் பட்டாள். ஆனால் எத்தனை தூரத்தில் இருக்கிறான்! திரும்பி வர இன்னும் சில நாட்கள் ஆகும் என்கிறானே... -அழ மாட்டாக் குறை அவளுக்கு. எனினும் அவள் சமாளித்துக் கொண்டாள்.

''தினசரி அதுக்காக டெலிபோன் செய்து ஏன் காசை வீணாக்கறீங்க?'' என்றாள் அதட்டலாக. 'கட்டும் செட்டுமாக இருந்து எல்லாக் காசையும் சேமிச்சாத்தானே, உங்க வருங்கால வாரிசுக்குத் தேவையாக இருக்கும்' -சொல்லத் துடித்ததை அடக்கிக் கொண்டாள்.

மித்திரன் பம்பாயிலிருந்து ஒருமாதம் கழித்து வந்தாலும் சரி, அவள் அந்த இனிய செய்தியைத் தொலைபேசி மூலமோ -கடிதம் மூலமோ தெரிவிக்கப்போவதில்லை... நேரில்தான் சொல்லப் போகிறாள். அவன் வரும் அன்று, சம்பிரதாயமாகச் சமைத்து வைத்துவிட்டு அவனுக்குப் பிடித்தமான பால் பாயாசத்தை டம்ளரில் ஊற்றி முன்னால் வைத்து...'ம்! சீக்கிரம் சாப்பிடுங்க... ஒரு சங்கதி இதைவிட இனிப்பாகச் சொல்லப் போகிறேன்' என்று ஆரம்பிக்க வேண்டும்...இப்படிப் பலவிதமாக மனதிற்குள் ஒத்திகை செய்துகொண்டிருக்கிறாளே! ஊஹூம் 'இப்போது சொல்லக் கூடாது' -மனம் எச்சரித்தது.

''என்ன ஒரே மௌனமாயிட்டே -தனியா இருக்க பயமா இருக்கா? இல்லே -எம்மேலே கோபமா?''

''தனியா இருக்க எங்க நீங்க விடறீங்க. படுக்கையறை மேஜை மேலேயிருக்கிற படத்திலேருந்து என்னை முறைச்சுப் பார்த்துக்கிட்டே இருக்கீங்க? ராத்திரி தூங்கவே இல்லே'' சிரித்தாள் அவள்.

''வீட்டுக்கு வந்ததும், அப்படியே உன்னை வச்ச கண் வாங்காம, நான் பார்க்கணும் போல இருக்கே. இன்னும் நாலு நாள் இங்கே தொடர்ந்து இருந்தேன்னா, 'ஆசை முகம் மறந்து போச்சே'ன்னு பாட வேண்டியதுதான்.''

''கல்யாணமாகி நாலு வருஷமாயிட்டது. நினைப்பு இருக்கட்டும்...'' -செல்லமாகக்கடிந்தாள் அவள்.

''அதனால் என்ன? நாலு வருஷமானாலும் எனக்கு அனுவின் முகம் ஆசை முகம்தானே?-''

''என்ன? இன்னைக்குப் பார்ட்டி, கீர்ட்டி ஏதாச்சும் இருந்ததோ?''

''சே!சே! நான் ஆரஞ்சு ஜூஸ் தவிர, என் அனுவைத் தவிர வேறு எதையும் மனதாலும் தீண்டுவதில்லைன்னு சொல்லி இருக்கேனே-''

''பின்னே ஏன்?''

''பிரிவின் வேதனை, மனம் தள்ளாடுது. மோடி கிறுக்குதடி தலையை, பழைய மொந்தைக் கள்ளைப் போல.''

''முதல்ல போனை வையுங்க, டெலிபோன் ஆபரேட்டர் காதிலே விழப் போகுது,'' களுக்கென்று சிரித்தாள்.

''ஓ. கே! அம்மா உத்தரவு-ஐயா பணிகிறேன். ராத்திரி வேளை இரட்டைத் தாள் போட்டுக்கோ. உள் பக்கம் பூட்டிக்கோ-கவனம்-'' மனமில்லாமல் மித்திரன் போனைக் கீழே வைத்தான்.



அவனுடன் பேசியானதும் மனதில் ஏற்பட்ட புதுத்தெம்பில் மறுநாள் பாடங்களைப் பற்றிய குறிப்புகளை வேகமாக எடுத்து முடித்துக் கொண்டு, நிம்மதியாகப் படுத்து உறங்கி விட்டாள்.

மறுநாள் கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபோது கதவிடுக்கு வழியாக கீழே கிடந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

மித்திரனுக்குக் கடிதம் எழுதப் பொறுமையே கிடையாது. கூடவே வேலைகளின் சுமை வேறு. எனவே தொலைபேசியைத்தான் அவன் அடிக்கடி உபயோகிப்பான்.

இந்தக் கடிதம்...? சரயூ எழுதிஇருந்தாள். அவள் கடிதத்தைக் கண்டதும், மறு தபாலில் அலறிப் புடைத்துக் கொண்டு, அனுப்பப்பட்ட கடிதம்!

காப்பி குடிக்க மறந்து, கதவை மூடிவிட்டு, கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

சரயூவிற்கு இரத்னச் சுருக்கமாகவே எதையும் சொல்லத் தெரியாது. நாலு பக்கங்கள் மகன் தீபக் பரீட்சையில் வாங்கின மார்க்குகளில் ஆரம்பித்து, மாமியார் இந்தத் தடவை எத்தனை பெரிய ஜாடி நிறைய ஆவக்காய் ஊறுகாய் தயாரித்தாள் என்பதுவரை அலசிவிட்டுக் கடைசியில் எழுதி இருந்தாள்.

அனு சங்கதியைப் படித்ததும் எனக்கு எத்தனை ஆனந்தம் தெரியுமா? நீ ஒரு காரியம் செய்வியா? ஒரு பத்து நாள் லீவு எடுத்துக்கொண்டு இதுசமயம் நீ என்னோடு வந்து இரு. உனக்கு என் மாமியார் சங்கதிதான் தெரியுமே. யாராவது விருந்தாளி வந்து விட்டால்...அவர்களுக்கு சந்தோஷம் பிய்த்துக் கொண்டுவிடும். விதம் விதமா சமைத்துப்போட ஆரம்பிச்சிடுவாங்க. உன்மேலே அவங்களுக்கு ரொம்ப அன்பு. விஷயத்தைச் சொன்னதும் என்னை உடனடியா எழுதிப் போடச் சொல்லி 'அனுவை வரச் சொல்லு. அம்மா இல்லாத குறையை நான் தீர்த்து வைக்கிறேன். என் கையால் நல்ல காரக்குழம்பை வச்சு...பூப்போல இட்டிலி சுட்டு...பக்கத்திலே

உக்கார்ந்து சாப்பிடச் சொல்லி, அவளைப் பெத்தத் தாயார் போல உபசரிப்பேன்னு சொல்லு. இதுசமயம் என்னைப் போலப் பெரியவங்களோட அரவணைப்பு ரொம்பத் தேவையின்னு எழுது'னு தொணதொணத்து விட்டாங்க. எழுதி விட்டேன். எனக்கும் உன்னைப் பார்க்க வேணும் போல இருக்கிறது. ஹைதராபாத்திலே அழகான வளையல்கள் உண்டு. தெரியுமா உனக்கு? எங்க வீட்டிலேயே உனக்கு வளைகாப்பு செய்து கொண்டாடணும் போல ஆசையா இருக்கிறது. உன்னைப் பிரிந்து உன் கணவர் அடிக்கடி 'டூர்' போகிறாரே. யோசித்துப் பார்... உனக்கு ஒருத்தரும் இல்லையென்று மனதை அலட்டிக் கொள்ளாதே. நாங்கள் இருக்கிறோம்.

எப்போதும் உன்

**சரயூ**

கண்கள் பனிக்க உட்கார்ந்திருந்தாள் அனு. சரயூ எத்தனை அன்பான தோழி. கபடமே இல்லாத வெகுளித்தனம்! மாணவி என்ற நிலையில் கல்லூரி நாட்களில் அவள் எத்தனையோ பெண்களுடன் நல்ல முறையில் பழகி இருக்கிறாள். ஆசிரியர் என்ற பதவியில் இப்போதும் பல பெண்களை அவளுக்குத் தெரியும்.

யாரும், சரயூவின் அன்பில், நட்பில், அவளது நிழலைக் கூடத் தொட முடியாது. உண்மையில் இவள் கொடுத்து வைத்தவள்தான்...யார் சொன்னது அது? பிசிராந்தையார்...

அன்பான மனைவி-நல்ல பிள்ளைகள்-பண்பான நண்பர்கள் - அமைதியான அரசு-இவைகளால் அவருக்கு நெடுங்காலமாக நரை தலையே இல்லையாம்!

இவளுக்கும்தான்-அன்பான கணவன், அமைதியான வாழ்க்கை, உண்மையான தோழி எல்லாம் இருப்பதால் நீண்ட காலம் இளமையின் அழகோடு இருக்க முடியுமோ?



கண்ணாடியில் பிரதிபலித்த உருவத்தைப் பார்த்து இவள் வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டாள். மித்திரன் வந்ததும் அவனிடம் சரயூவின் கடிதத்தைக் காட்ட வேண்டும்...'என்னைப் பார்த்துக் கொள்ள என் சிநேகிதி இருக்கிறாளாக்கும்' - சொல்லிக் கொஞ்சம் பொறாமையைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்க வேணும்.

என்னென்னவோ எண்ணிக் கொண்டபடி இன்னும் சில நாட்கள், தனிமையில் சுமையில்லாமல் வேகமாக ஓட்டினாள்.

வெள்ளிக்கிழமை மாலை...கல்லூரியினின்றும் பஸ் நிலையத்திற்கு வந்தபோதுதான் அவளுக்கு அந்த எண்ணம் ஏற்பட்டது.

சரயூவின் மகளுக்கு, வரப்போகும் பிறந்த நாளுக்கு என்ன நிறத்தில் பட்டுப் பாவாடை வாங்கினாள் என்பதைக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

உமாவிற்கு அவளும் ஏதாவது சிறு பரிசு ஒன்றை வாங்கி அனுப்ப வேண்டாமா?

உமாவைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டிருப்பதாகத் தெரிந்தது. கதைப் புத்தகக் கடைக்குள் நுழைந்தாள்

கிரீம்ஸ் - ஹான்ஸ் ஆண்டர்ஸன் - பஞ்ச தந்திரா - அமர்சித்திரா என்று எல்லாவற்றையும் பார்த்து முடித்து விட்டு... முடிவில் 'முன்னொரு காலத்தில்' என்ற ஒரு புத்தகத்தை எடுத்தாள்.

அதில் பல பிரபல குழந்தைக் கதை எழுத்தாளர் களின்-பிரசித்தி பெற்ற கதைகள் அழகான படங்களுடன் இருந்தன. எழுபத்தைந்து ரூபாய் கொடுத்துப் புத்தகத்தை வாங்கி, பார்சல் செய்து அனுப்பத் தேவையான காகிதத்தையும் வாங்கிக்கொண்டு கிளம்பினாள்.

''ஹலோ அனு...!''-குரல் விழுந்தது. தூக்கிவாரிப் போட ஆண் குரல் வந்த திசையில் திரும்பினாள்.

குப்பென்று வியர்த்துக் கொட்ட-இதயம் இரண்டாகப் பிளந்துவிடும் போல் வேமாகத் துடிக்க, திகிலில் உறைந்து போனாள்.

ஹரிநாதன்! பாவி! வருடங்கள் சில ஓடிவிட்ட போதிலும், அவன் அப்படியே சிறிதும் மாறாமல், ஓங்கி உயரமாகப் படத்தை விரித்துக்கொண்டு கொத்தத் தயாராக நிற்கும் பாம்பைப்போல விஷமான கவர்ச்சியுடன் நின்று கொண்டிருந்தான்.

''என்னைத் தெரியலையா அனு? நான் அப்படியா மாறிட்டேன்''-கேட்டுக் கொண்டே அவள் அருகில் வந்தபடி முகத்தை மறைத்திருந்த கருப்புக் கண்ணாடியை எடுத்தான். வலது கன்னத்தில் அந்த அழகு மச்சம் அப்படியேதானிருந்தது. தலை முடியும் கூட ஒரு சிறு நரையையும் காணவில்லை. முன்னைவிடச் சற்றுப் பருத்து இருந்தான்.

ஹரிநாதன் போன்ற அயோக்கியன்களுக்குச் சுலபமாகக் கிடைக்கும் பணத்தில் உடலில் பருமனும் வைக்கும் பாங்கிக் கணக்கில் பணமும் ஏறும். ஆனால் அவன் கணக்கில் பாபம், சுமைபோல் ஏறுவதை எப்போது புரிந்து கொள்ளப் போகிறான் - மனச்சாட்சியில்லாத மிருகம்! பொங்கி வந்த உணர்வுகளைச் சட்டெனச் சமாளித்துக் கொண்டாள்.

சுற்றிலும், ஆண்களும், பெண்களுமாகக் கடைக்குள் இருந்த கும்பலைக் கண்டு தைரியம் பிறந்தது.

''நீங்க யாரு? எனக்கு உங்களைத் தெரியாதே. என் பேரு அனு இல்லே-தவறா புரிஞ்சு கொண்டிருக்கீங்க-''கூறிவிட்டு விடுவிடென வேறு ஒரு பகுதிக்குள் புகுந்து, அங்கிருந்த கூட்டத்தினூடே அந்தப் பக்கம் வாயில் வழியாக வெளியேறி,



அருகில் வந்து நின்ற ஒரு டாக்சிக்குள் பாய்ந்து வீட்டுக்கு ஓட்டச் சொன்னாள்.

அதே சமயம் திதிலுடன், பின்புறக் கண்ணாடி வழியே, கடை வாயிலைப் பார்த்தாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஹரிநாதனைக் காணாதவளாய், ''அப்பாடா!'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். தேகமெல்லாம், கிடுகிடுவென்று நடுங்குவதை உணர முடிந்தது.

வீடு வந்ததும், உள்ளே கதவை மூடிக்கொண்டும், மனதில் அச்சம் நீங்கவில்லை. குளித்து வேறு உடுத்திக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தவளுக்கு, உணவு வேம்பாகக் கசந்தது.

மசக்கையால் ஏற்பட்ட குமட்டல் அல்ல. இத்தனை காலத்திற்குப் பின் இனிமையான வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இந்தச் சமயத்தில் தாயாகும் நிலையிலுள்ள அவளுக்கு இப்படி ஒரு பேரிடியா?

இந்த ஹரிநாதன் எங்கிருந்து திடீரென்று முளைத்தான். சுந்தரமூர்த்தி தம்பதியர் இறந்து போய் அந்த வீட்டை வேறு யாரோ வாங்கி இடித்து, மருத்துவமனையாகக் கட்டி விட்டார்களே!

அவள் ஏன் கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படுகிறாள்? ஹரிநாதன் இப்போது அவளை என்ன செய்து விட முடியும்? எதற்காக அவள் அவனைக் கண்டு பயப்பட வேண்டும்? அவன் கிடக்கிறான்!

தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டும் அந்த நினைவுகள் நிழலுருவில் நெஞ்சுக்குள் எழுந்து இம்சை செய்யத் தவறவில்லை.

சுந்தரமூர்த்தி தம்பதியருடன் அவள் வசிக்கத் துவங்கிய புதிதில் கூட, அவள் அவர்களைப் பற்றிச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. வேலையைத் தேடி மனுக்கள் எழுதிவிட்டு,

நேர்முகத் தேர்விற்கு அலுவலகப் படிகளை ஏறி இறங்கி, கல்லூரித் தலைவிகளைக் காணச்சென்று, வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த சமயம்...

சுந்தரமூர்த்தி தம்பதியர் நடுவயதைத் தாண்டிவிட்டவர்கள். கணவனுக்கு இரத்த அழுத்தம். சர்க்கரை வியாதி இத்தியாதிகள் இருந்தன. பத்தியச் சாப்பாடு.

மனைவிக்கு முட்டிகளில் வீக்கம், கைகால் குடைச்சல், இடுப்பு வலி, சதா மண்டையிடி. அவள் தாயாருக்குக் கூடத்தான் இரத்த அழுத்த நோய் இருந்தது. அதற்காக இப்படி அவள் சதா முடங்கிக் கொள்ள முடியவில்லையே? அனுவிற்குக் கூட ஒற்றைத் தலைவலி எப்போதும் வரும். அதற்கு என்று வேலைகளை மூட்டை கட்டி அவள் வைத்ததில்லை.

'விறகு வெட்டிக்குப் பிளவை வந்தால்...கோடாலியால் ஒரு அடி குடுக்கணும்' என்று அம்மா அடிக்கடி சொல்வாள்.

பணம் இருக்கும் தெம்பிலே சுந்தரமூர்த்தி தம்பதியர் தமது வியாதிகளைப் பெரும்படியாகப் பாராட்டிக் கொண்டாடினார்கள்.

நாள் முழுவதும் கட்டிலில் கணவன் காலை நீட்டிக் கொண்டு ஓய்வாகப் படுத்துக் கிடப்பார்.

மனைவியோ...தலையில் ஒரு துண்டை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு...நொண்டி, நடந்தபடி அனுவை நாள் முழுவதும் ஏவியபடியே இருப்பாள்.

இரவில் படுக்கப் போகுமுன் தினமும் தவறாது அவளது கால்களில் ஆயுர்வேத வைத்திய சாலையில் வாங்கி வைத்த தைலத்தைப் பூசி... நீவி விட்டு... அவள் தூங்கும் வரைக் கால்களைப் பிடித்து விட வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் தவறாது எண்ணெய் தேய்த்து அவளை முழுக்காட்டி விடவேண்டும். மழை நாட்களில் முதுகு வலிக்குத் தவிடு வறுத்து ஒத்தடம் போடவேண்டும்



சமையல் வேலை, வீட்டு வேலை போக...இப்படி ஒரு பணிவிடையையும் அனுவிடம் பெற்றுக் கொண்டிருந்தாள் வேதவல்லி அம்மாள்.

தரையில் கிடந்த துரும்பை அப்பால் போடாது சதா சாய்வு நாற்காலியில் அமர்ந்து, பொழுதைப் போக்கச் சுந்தரமூர்த்திக்குப் பணம் எங்கிருந்து வருகிறது?

பரம்பரைப் பணக்காரரோ...? மூதாதையர் உழைத்துச் சேர்த்து வைத்துப் போனதை வங்கியில் போட்டு வைத்த வட்டியாக வருமோ?... ஆனாலும் மனிதர் அடிக்கொரு தடவை டெலிபோனில் ஏதோ பேசுவார்.

தெலுங்கு-ஆங்கிலம்-கன்னடம்...இடையே சங்கேத மொழி என்று அவியல் பாஷையால் யாருடனோ அடிக்கடி பேசுவார்.

டெல்லி, கல்கத்தா, பம்பாய் என்று பல இடங்களிலிருந்து 'டிரங்கால்' வரும். அப்போதெல்லாம் தமது ஏ.சி.அறையின் கண்ணாடிக் கதவுகளை இறுக்கமாக மூடிக்கொண்டுதான் பேசுவார்.

என்ன பேசுகிறார்? யாருடன் பேசுகிறார்? எதற்காகப் பேசுகிறார்? எதேச்சையாக அந்த வழியே நடமாடும் அனுவிற்கு ஆவல் ஏற்பட்டதுண்டு. ஆனால் முயன்றதில்லை.

அம்மா இறந்து வருடங்கள் ஒன்றுக்கு மேலாகிப் போனது. இன்னமும் அவள் விரும்பிய நல்லதொரு வேலை கிடைக்கவில்லை. தொடர்ந்து சுந்தரமூர்த்தி தம்பதியர் தயவில், அனாதையாகிவிட்ட அவள், வேறு கதியின்றி தங்கியிருந்தாள்.

சுந்தரமூர்த்தி வீட்டிற்குச் சில சமயம் நண்பர்கள் வருவதுண்டு. அப்பொழுது அவளை...தங்கள் வீட்டில் வேலை செய்யும் பெண்ணாகச் சில சமயங்களில் வேத வல்லி அறிமுகப்படுத்தியிருக்கிறாள்.

அதுசமயம் அனுபமாவிற்குச் சுள்ளென்று கோபம் வரத்தான் செய்தது. உண்மையில் அவள் நிலை அந்த வீட்டில் அதுதானே?

தெரிந்தவர்கள் எவராவது அவளைப்பற்றி விசாரித்தால் வேதவல்லியம்மாள் சட்டென அவள் தங்களது தூரத்து உறவுப் பெண், என் கணவரது ஒன்றுவிட்டத் தம்பி மகள்... சுத்தமானதொரு பொய்யைச் சொல்லி அறிமுகப்படுத்துவாள்.

இந்த வித்தியாசமான அறிமுகங்கள் ஏன்? அவளுக்கு அதிசயமாகத்தானிருந்தது. ஆனாலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

வேலைக்கு மனுப் போட்டிட்ட கல்லூரியில், தற்காலிகமாகக் கிடைக்க வேண்டிய இடத்திற்காக நேர்முகத் தேர்வுக்குப் போய்விட்டு வந்திருந்தாள்.

யாரை வேலைக்கு அமர்த்துவது என்று ஏற்கெனவே தீர்மானமாகிவிட்டது. பத்திரிகையில் ஒப்புக்காக விளம்பரம் கொடுக்கப்பட்டிருந்த வேலை...கண் துடைப்பு என்று புரிந்து கொண்டவள், மிக்க மன அதிர்ச்சியும் சோர்வுமாக வீடு திரும்பியிருந்தாள்.

வந்ததும் பார்த்தாள். வேதவல்லி, தலையில் பெரிய துண்டைச் சுற்றியிருந்தாள். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

''விருந்தாளி வந்திருக்கான். சீக்கிரம் சமையல் ஆகட்டும்''-அதிகாரம் செய்தாள்.

குக்கரை அடுப்பில் ஏற்றிவிட்டு முட்டைக்கோசைப் பொடிப்பொடியாக நறுக்கிக்கொண்டு...குனிந்தபடி சமையல் மேடையருகே நின்றவள்...வாயிற்படியருகே நிழலாடுவதை உணர்ந்து திரும்பினாள்.



கம்மென்று ஃபாரின் செண்ட் மணம். வலது கன்னத்தில் அழகு பொட்டு வைத்தது போன்றதொரு மச்சம். கூரான மூக்கு, சுருண்ட முடி, ஸ்போர்ட் ஷர்ட், பாண்ட் அலங்காரத்திலே இடுப்பில் ஒரு கையும், வாயிற் கதவின் மேல் ஒரு கையுமாக நின்ற வாலிபனை அதிர்ச்சியோடு பார்த்தாள்.

''ராத்திரிக்கு என்ன சாப்பாடு கிடைக்குமுன்னு நானே வந்து எட்டிப் பார்க்கிறேன். என் பெயர் ஹரிநாதன். என் பெரியம்மா ஹரின்னு கூப்பிடுவாங்க.''-கூறியபடி தன் வரிசைப் பற்கள் ஒளிர மெல்லியதாக மோகனப் புன்னகை பூத்தான்.

ஆண்கள் சகவாசமே இல்லாத கான்வெண்ட் படிப்பு... அதற்குப் பின்னர் பெண்கள் கல்லூரி...சதா அம்மாவின் அரவணைப்பு. இப்படியே வளர்ந்தவள் அவள்.

அலுவலகங்களில் வேலை தேடிக்கொண்டு அதிகாரிகளைப் பார்க்கச் செல்லும் ஒரு நிர்ப்பந்தம் தவிர...அவளுக்கு ஒரு இளைஞனுடன் நின்று...சிறிது நேரம்...மனம் இனிக்கப் பேசிய அனுபவமே கிடையாது. முதல் முதலாக...நேயமாக அவளிடம் வந்து பேசிய ஆண் அழகன் ஹரிநாதன்.

அவள் மனதிலே ஒரு இன்பச் சிலிர்ப்பு ஏற்பட்டது. உண்மைதான். கவர்ச்சியாக-வாயிற்படியை முக்காலும் அடைத்தபடி, கண்களால் அவளை விழுங்கியபடி, புன்னகை பொங்க நின்ற ஷரிநாதனை அவளுக்குப் பார்த்த உடனேயே பிடித்துவிட்டது.

சுந்தரமூர்த்தியின் சொந்தக்காரன் அவன். தோற்றத்திலே பணக்காரக் களை! அவனை மனம் விரும்பியும் பயன் இல்லையே-

எடுத்த எடுப்பிலேயே உணர்வுகளுக்குத் தடைபோடத்தான் முயன்றாள். ஆனால் ஹரிநாதன் அவளது இளமை ஆசைகளுக்குத் தூபம் போட்டான்.

அன்று இரவு அவள் சமைத்த சாப்பாட்டை ஓஹோவென்று புகழ்ந்தான். அந்த வீட்டில் தங்கியிருந்த அந்த நாட்களில் அவன் அவளிடம் வலிய வந்து பலமுறை பேசினான்.

கல்கத்தா கம்பெனி ஒன்றில் பெரிய பதவியில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டான்.

''அவனுக்கென்ன பெத்தவங்களுக்கு ஒரே பிள்ளை- தஞ்சாவூரிலே வீடு நிலம்னு எக்கச்சக்கமாகச் சொத்து இருக்கு. ஆனால் பெத்தவங்க ரெண்டுபேரும் போயிட்டாங்க. பாவம்!''- வேதவல்லியம்மாள் ஒத்துப்பாடிப் புலம்பினாள்.

அடுத்த முறை இரண்டு மாதங்களுக்குப் பின்னர் மறுபடியும் அவன் வந்தான். பத்து நாள் லீவில் வந்திருப்பதாகக் கூறினான்.

நீங்கள் என்பதிலிருந்து நீ என்கிறவரை நெருங்கி விட்டிருந்தான்.

''உனக்கு நான் வாங்கி வந்த பரிசு'' என்ற அந்த பால் பாயிண்ட் பேனாவை-அவளிடம் தனியாக இருக்கும்போது மெல்லிய குரலில் குழைந்தபடி கொடுத்தான்.

''தேங்க் யூ! பேனாவா? எதுக்கு நிறைய மனுக்கள் எழுதவா?'' அவளும் சற்றுத் தைரியமாகச் சிரித்தாள்.

''கன்னத்தில் குழி விழ நீ சிரிப்பதை இன்னி முழுசும் பார்த்துக்கிட்டே நிக்கணும் போல மனம் தடுமாறிப் போறேன். கன்னத்தில் குழி விழுந்தால் ரொம்ப அதிர்ஷ்டசாலின்னு சொல்லுவாங்க. உனக்கு வெகு சீக்கிரம் பெரிய அதிர்ஷ்டம் காத்திருக்கு...'' இரு பொருள் பட மயக்கும் புன்னகையுடன் அவளைக் கனவுக் கண்களால் ஈர்த்தான்.

கன்னங்கள் சிவக்க, நெஞ்சு பதற, இன்பப் பரவசத்திலே கால்கள் தள்ளாட, மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள் அவள்.



ஹரிநாதன் அவளை நேசிக்கிறான். மார்பு படபட வென்று துடித்தது. ''பரிசாக் கொடுத்த பேனா எதுக்குத் தெரியுமா? எனக்குக் கடிதம் எழுதத்தான். இந்த வீட்டிலே நமக்குப் பேச முடியாம இடைஞ்சலாக ரெண்டு பெரும் பூதங்கள் இருக்குது. கடித மூலமாவது நாம மனம் விட்டுப் பேசிக்கலாமே''- தனது முகவரிச் சீட்டை அவள் கையில் அமுத்திவிட்டு மாயமாய் மறைந்து போனான்.

சில நாட்களுக்குப் பின்னர் அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. சுந்தரமூர்த்தி அதைக் கவனிக்கவில்லை. பின்னர்தான் புரிந்து கொண்டாள். அத்தனையும் திட்ட மிட்டு அவர்கள் நாடகமாடியிருக்கிறார்கள் என்று.

அவளை அவன் காதலிப்பதாகவும், மணந்துகொள்ள ஆசைப்படுவதாகவும் தெரிவித்து அவளது விருப்பத்தைக் கேட்டு எழுதியிருந்தான்.

வேலை கிடைக்கவில்லை...வசதியான ஓர் இளைஞன் காதலித்து அவளை விரும்பி மணக்க முன்வருகிறான்... அவளுக்கும் அவனைப் பிடித்திருக்கின்றது. தடை ஏன்? பேசாமல் கல்யாணத்தைச் செய்துகொண்டு ஒருத்தனுக்கு மனைவியாக நிம்மதியாக வாழ்வதை விட்டு, சுந்தரமூர்த்தி வீட்டில் அனாதையாகத் திண்டாடப் போகிறாளா? கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதம் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்து இரகசியமாகப் பதிலும் போட்டு விட்டாள்.

பின்னர் பல கடிதங்கள் - காதல் கடிதங்கள் இடையே பரிமாறப்பட்டன. நான்கு மாதங்களுக்குப் பின்னர், அவன் மறுபடியும் வந்தான் - திருமண முடிவோடு வரப்போவதாக முன்கூட்டியே அவளுக்குக் கடிதம் எழுதி விட்டிருந்தான்.

பெரியம்மாவும்-பெரியப்பாவும் சங்கதி கேட்டுக் கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

போயும், போயும்...அவர்கள் வீட்டில் வேலை செய்தவளின் மகளையா அவன் விரும்புகிறான்...? ஒப்புதல் தர மறுத்தனர். பிறகு மெல்லச் சமாதானமடைந்து, இசைந்தனர்.

பெற்றோர்களில்லாத பிள்ளையாதலால் கல்யாணத்தைப் பெரியப்பா எடுத்து நடத்துவதாக ஏற்பாடு. வீண் செலவு தேவையில்லை. வடபழனியில் எளிய முறையில் கல்யாணம் செய்து பிறகு அன்றிரவே கல்கத்தா விமானத்தில் பயணம்.

இடையே சில நாட்கள் தானிருந்தன. வேண்டியதை வாங்கிக்கொள்ளச் சொல்லி வேதவல்லியம்மாள் அவளிடம் ஆயிரம் ரூபாய் தந்தாள்...கல்யாணத்திற்கு என்று அழகான அரக்கு வண்ணக் காஞ்சிபுரம் பட்டுச் சேலை பச்சைக் கரையில் படிப்படியான சரிகையுடன் அமர்க்களமாக வாங்கியிருந்தாள்.

காலையில் தலைவலி என்று சொன்ன பெரியப்பாவிற்குப் பகலில் அதிகமாகி டாக்டர் வந்து பார்த்ததில் இரத்த அழுத்தம் அதிகமாகி விட்டது. அவர் மயக்கம் போட்டு விட்டதில் வீடே அமர்க்களப்பட்டுவிட்டது.

வைத்தியத்தில் நினைவு தெளிந்தார். ஆனால் ஒரு கையும், காலும் விளங்காது போன்ற நிலையில் படுத்த படுக்கையாகிவிட்டார். பேச்சுத் தடுமாறியது.

''இந்தத் துக்கிரிக்குக் கல்யாணம்னதும் நமக்கே தீங்கு வந்திட்டுதே''- வேதவல்லி புலம்பினாள்.

அதைப்பற்றி அனுபமா கவலைப்படவில்லை. அடுத்த வாரம் கல்கத்தாவிலிருந்து ஹரிநாதன் வரப்போகிறான் - ஏற்பாடுப்படி கல்யாணம் தடையின்றி நடக்கப் போகிறது - படுக்கையில் கிடக்கும் பெரியப்பாவிடம் ஆசி பெற்றுக் கொண்டு தம்பதியர் புறப்படப் போகிறார்கள் என்று ஹரிநாத் எழுதியிருந்ததைப் படித்துவிட்டு அவள் நிம்மதியாக இருந்தாள்.



அன்று இரவு வேதவல்லிக்குக் கால்பிடித்து, சைத்யோ பகாரங்கள் செய்துவிட்டுப் படுக்கப் போனவள், கொஞ்ச நேரத்தில் தன் அறையிலிருந்து எழுந்து தண்ணீர் சாப்பிட வந்தாள்.

தீர்க்கமான பேச்சுக்குரல் சுந்தர மூர்த்தியின் அறைக் குள்ளிருந்து கேட்டது. பேச்சு வராது கொழ கொழவென வார்த்தைகள் தெளிவின்றிக் கேட்டன. ஆனாலும் அவள் பெயர் அங்கே அடிபடுவதைக் கேட்க முடிந்தது. தவிப்புடன் கதவிற்கு வெளியே ஓசைப் படாமல் காதைத் தீட்டிக்கொண்டு கேட்டாள்.

''இப்போ திடீர்னு உங்களுக்கு என்ன இப்படி இரக்கம் வந்திருச்சு...''- அதட்டினாள் வேதவல்லி.

''கைகால் விழுந்திட்டுது பாவம்னு தோணுதாக்கும். இத்தனை நாளா எத்தனை பெண்களை நாம இப்படி அனுப்பி வைக்கலை. இதுக்கு மட்டும் ஏன் உருகுறீங்க''...மேலும் கத்தினாள்

அனுபமா திகிலுடன் மூச்சைப் பிடித்துக் கொண்டு கூர்மையாகக் காது கொடுத்துக் கேட்டாள். வேதவல்லி என்ன சொல்கிறாள்?

''இல்லே, பாவம் அனு!சின்னப் பிள்ளையிலேருந்து இந்த வீட்டிலே குழந்தையாட்டம் வளர்ந்துட்டுது. அவ அம்மா நமக்கு நாயா உழைச்சிருக்கா. இவளும் நல்லாவே வேலை செய்யறா. திருட்டுலே கூடக் கன்னக்கோல் வைக்கிற எடம் சாத்தற எடம்னு வரைமுறை இருக்கல்லவா?''

''இந்தக் கதையெல்லாம் வேணாம். இவளோட அழகுக் குன்னு முப்பதாயிரம் கொடுக்க ஹரிநாதன் ஒப்புக்கிட்டிருக் கிறான். கல்கத்தாவிலே இவளை லட்டு போல வித்திடுவான்? அவனுக்குத்தான் நமக்குத் தெரிஞ்சு எத்தனை பொண்ணுங்களைக் காதலிச்சதா கதை கட்டி, கட்டிக்கிட்டதா பேர் பண்ணி, சேர்க்க வேண்டிய எடத்துல சேத்திருக்கான்...'' உறுமினாள் அவள்.

''அந்தப் பெண்ணுகள் எந்தெந்தப் பாவிகள் கையிலே சிக்கி விபசாரத்தில், இரத்தக் கண்ணீர் வடிக்குதோ-அந்தப் பாவம்தான்...'' சுந்தரமூர்த்தி தடுமாறினார்.

''பாவம் பார்த்துக்கிட்டிருந்தா ஹரிநாதன் பிளேனில் பறக்க முடியுமா? இப்படித்தான் உடுத்த முடியுமா? நமக்கு அள்ளி வீச முடியுமா? இல்லே நாமுந்தான் பங்களாவும் தோட்டமுமா வாழ முடியுமா? போகட்டும். ஒண்ணு கேக்கறேன். நான் என்ன நீங்க கட்டின பெண்சாதியா? இப்ப மனசு வச்சாக்கூட இப்படியே உங்களை விட்டுவிட்டுக் கல்கத்தாவுக்கு, ஹரிநாதன் கூட்டாளியா புறப்பட்டுப் போயிடுவேன். அங்கே போனா லட்சத்தில் புரள முடியும்.''

''வேதவல்லி! அந்தப் பொண்ணு ரொம்ப நல்ல பொண்ணு, அதன் வாழ்க்கையை நாசப்படுத்தாதே. ஹரிநாதன் பொய்யா ஒரு தாலியைக் கட்டி இழுத்துக்கிட்டுப் போய்ச் சிவப்பு விளக்குப் பகுதியில் தள்ளிவிடுவான்-எனக்கு உடம்பெல்லாம் நடுங்குது. மனச்சாட்சி உறுத்துது.'' அழுகை கலந்த கெஞ்சும் குரலில் கேட்டார்.

''சே! வாயை மூடய்யா! பெரிய மனச்சாட்சியைக் கண்ட யோக்கியன். அதை என்னைக்கோ எடுத்து ஆணியில் மாட்டின மனுஷன். அந்தப் பொண்ணு யமுனாவை ஹரிநாதன்கிட்ட தள்ளினப்போ, இப்படித்தான் ஒப்பாரி வச்சீங்க-ஒரு சமயம் உங்க மனசில இந்தப் பொண்ணு மேலே ஆசை கீசை ஏற்பட்டு இருக்குதோ என்னவோ...''-உறுமினாள் அடித் தொண்டையில்.

உடல் முழுவதும் வியர்வை கொப்பளிக்க, கிலியில் கால்கள் தள்ளாட, மூச்சுவிடப் பயந்தவளாக பூனைப் போலத் தன் அறைக்குள் ஓசையின்றிப் புகுந்து கொண்டாள் அனு.

ஹரிநாத்? அப்படிப்பட்ட காதகனா? காதலன் என்றல்லவா நம்பினாள்!



ஐயோ! சுந்தரமூர்த்தி தம்பதியர் உயர் மட்டத்து வாசிகள்-பரம்பரைப் பணக்காரர்கள்-கருணை உள்ளம் மிக்க வள்ளல்கள்-என்று நினைத்ததெல்லாம் கற்பனைகளா? இந்த மாதிரி வியாபாரமா நடத்துகிறார்கள்?

இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்? அவள் மனம் பரபரத்தது. அன்றிரவு முழுவதும் உறங்காமல் பல விதமாக அச்சம், திகில், பதை பதைப்பு என்ற உணர்வில் யோசித்துக் குழம்பிக் கொண்டிருந்தாள்.

தந்திரத்தைத் தந்திரத்தால்தான் வெல்ல வேண்டும். மறுநாள் காலை அவள் சாமான்கள் வாங்கும் சாக்கில், கடைக்குப் புறப்பட்டாள். ஆனால், மகளிர் பாதுகாப்பு இல்லத்தைத் தேடிப் பிடித்து, அதன் தலைவியிடம் அவள் சரணாகதி அடைந்து விட மிகப் பலமாகத் தீர்மானித்து விட்டிருந்தாள்.

மகளிர் பாதுகாப்புத் தலைவியிடம் தனது நிலைபற்றி அவள் முறையிட்டுக் கதறியபோது, தலைவி நிலை குலைந்து போனார். அனு சென்னையில் தங்கினால் ஆபத்து நிச்சயம் என்பதை அவர் உணர்ந்து விட்டதால், ''இதப் பாரும்மா, இனி இந்த ஊரில் எக்காரணம் கொண்டும் தங்குவது சரியல்ல. அதனால், என்னுடைய சொந்த முயற்சி மூலம் உனக்கு உதவி செய்ய முன்வருகிறேன். ஹைதராபாத்தில் தரநாவில் என் தோழி மைத்ரேயி அம்மாள் சிறந்த சமூக சேவகி. அவர்களிடம் உன்னை அனுப்பி வைக்கிறேன். நீ சௌகரியமாக,ப்யமில்லாமல் அங்கே வாழலாம்'' என்றார்.

அனுபமாவிற்கு அப்போதிருந்த பதைபதைப்பில் உலகின் எந்தக் கோடிக்கும் தப்பி ஓடிவிடத் தயாராக இருந்தாள்.

''மிக்க நன்றி அம்மா'' என்று கண்ணீருடன் நாத் தழுதழுக்க நன்றி தெரிவித்தாள்.

மறுநாள் ஹைதராபாத் எக்ஸ்பிரஸில், கூண்டிலிருந்து கிளி, சுதந்திரத்தின் எல்லைக்குப் பறந்தோடி விட்டது.

## 4

அன்று காலை எழுந்திருக்கும்போதே அவள் தலை பாரமாகக் கனத்தது. வேலைக்காரி முருகம்மாள் புயலாக வந்து அதே வேகத்தில் வேலையை முடித்துக்கொண்டு போய்விட்டாள். குளித்தபின் அள்ளிச் செருகிய கூந்தலை வாரி முடிக்க அறைக்குள் வந்த அனுபமா அப்படியே அந்த மேஜைமுன் அமர்ந்துவிட்டாள்.

புகைப்படத்தில் அவளருகில் தோளோடு தோள் இடித்தபடி கழுத்து நிறைந்த பூமாலைகளுடன், மனது நிறைந்த மகிழ்ச்சியுடன் சிரித்தபடி இருந்த மித்திரனைப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

கண்களிலிருந்து பெருகிய கண்ணீர், கன்னங்களில் வழிந்தோட, ''மித்திரன்! உங்களை நான் என் உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன்னா நீங்க நம்புவீங்களா? உங்க மனதில் ஒரு நூலிழை **சந்தேகம்** ஏற்பட்டால்கூட என் மனம் வெடிச்சு செத்துப் **போயிடுவேன்**. மித்திரன், நான் நல்லவள்! உங்களுக்கு உண்மையான மனைவியாகத்தான் இருந்து வரேன். உங்க குழந்தைக்குத் தாயாக இருக்கிறதிலே ரொம்பப் பெருமைப்படறேன்'' என்று அரற்றினாள்.

''மித்திரன்! உங்கிட்ட இந்த மகிழ்ச்சியான செய்தியைப் பேச நினைச்ச சமயம் பாத்து அந்தப் பாவி ஹரிநாதன் வந்து...என்னை அடையாளம் கண்டு கிட்டானே! எனக்கு ரொம்பப் பயமா இருக்கு மித்திரன். நான் படிச்சவள்தான். ஆனா...உலகமே தெரியாத மக்கு. உலக அனுபவம் வேற இல்லையா? அதனை நான் சந்திச்சப்போ...நான் வெளி உலகத்தின் மோசடி தெரியாத பத்தாம் பசலியா இருந்திட்டேன்.

''முதன் முதலா சந்திச்ச வாலிபன் என்கிறதால் இளமைப் பருவத்து ஈர்ப்பு...ஒரு போதை அல்லது கவர்ச்சி-உண்மையில்



அது காதலே இல்லே. நீங்க சொல்வீங்களே 'இன்பாச்சுவேஷன்னு' ஆமாம். பால் உணர்வில் ஏற்பட்ட கவர்ச்சி...அந்த அயோக்கியன் என்னை நாசப்படுத்த எப்படித் திட்டம் போட்டிருந்தான்னு நான் உங்ககிட்ட விவரமா எடுத்துச் சொல்லிட்டிருந்தா...நீங்க ரொம்ப மனக்கஷ்டம் அடைஞ்சிருப்பீங்க இல்ல. என் சாமர்த்தியத்தாலே தப்பிச்சேன்னு மெச்சிக் கொள்வீங்க-நானும் கொஞ்சம் அஜாக்கிரதையா, அவன் பேச்சில மயங்கி, காதல் கடிதம் எழுதினேன். ஆனால் எல்லாமே மனத்தளவில்தான். எங்கம்மா உத்தமி. சமையல்காரியா வாழ்ந்தா. ஆனா ஓடிப்போன கணவனுக்காக வாழ்ந்தா! அவளால் வளர்க்கப்பட்டவ நான். அதனால, கல்யாணங்கிற புனிதமான பந்தத்திற்குப் பிறகுதான் கணவன் மனைவி உறவுன்னு அழுத்தமா, மனதில பதிஞ்ச கொள்கை - என்னைக் காப்பாத்திட்டுது. நீங்க நம்புவீங்களா மித்திரன்! ஒரு பெண் தன் உணர்வுகளை இப்படிக் கண்டபடி ஓடவிட்டாலே அவள் கெட்டுப் போனவளா நினைப்பீங்களா? தயவு செஞ்சு அப்படி நினைக்காதீங்க? நான் தாங்க மாட்டேன்...என்னால் முன்கூட்டியே ஏன் இதைச் சொல்ல முடியலேன்னு கேக்கிறீங்களா? ஒரு சமயம் இதைக் கேட்டு, உங்க மனம் கசந்து என் மேல-அன்பு இல்லாம போயிட்டா! அப்படி ஒரு பயம்? இப்ப மித்திரன்...எல்லாமே தெரிஞ்சு பிறகு...நீங்க என்ன பதில் சொல்லப் போகிறீங்க?''- விம்மி விம்மி அழுதாள். துயரத்தின் சுமை தாள முடியாது மனம் குமுற அழுதபடியே இருந்தாள்.

'கிர்'ரென்று முன்னறை தொலைபேசி அலறியது. கணவன் போனில் அழைக்கிறான் என்று, கண்களை அவசரமாகத் துடைத்துக்கொண்டு ஓடினாள்.

''ஹலோ! மிஸஸ் அனுபமா?''- குரோதமான குரல் மறுமுனையில்.

பாம்பைக் கையில் பிடித்தவள் போல், ரிசீவரை எடுத்தவள் கிடுகிடுத்துப் போனாள். இதயம் திக், திக் கென்றடித்தது. தொண்டை வரள, ''யார் அது'' என்றாள் சிரமத்துடன்.

''ஹலோ போனை வைக்க வேணாம். நான் அனு இல்லே. மித்திரன் வீடு இல்லே. ராங் நம்பர்னு போனை வைக்க நினைக்காதே. உன்னை நான் தேடாத இடமில்லை. புத்தகக் கடையிலே டிமிக்கி குடுத்த மாதிரி, இப்பச் செய்ய முடியாது உன்னாலே! நீ வேலை செய்கிற இடம், உன் கணவன் வேலை-இத்யாதிகளை நான் சரியாக் கண்டுபிடிச்சு வச்சிருக்கேன். விடமாட்டேன்.''- ஹரிநாதன் மறுமுனையில் கொக்கரித்தான்.

''தூ! பெரிய துப்பறியும் மேதை! இப்ப எதுக்குப் போன் செய்தே?'' ஆத்திரப்பட்டாள் அவள்.

''கல்யாணத்துக்கு நாள் வச்சிட்டு, சுந்தரமூர்த்திகிட்ட சுளையாகப் பத்தாயிரம் கொடுத்துட்டுப் போனேன். என்னை ஏமாத்திட்டே இல்லே...? வஞ்சம் தீக்காம விட மாட்டேன்.''

''வாயை மூடு அயோக்கிய ராஸ்கல். நீ கல்யாணமா செய்துக்கப் பாத்தே? என்னை எங்கே கொண்டு தள்ள வேஷம் போட்டே. என்ன தொழில்லே ஈடுபட்டிருக்கேன்னு சுந்தரமூர்த்தி சொல்லிட்டாரு.''-உறுமினாள்.

''நான் அப்படிப்பட்டவன்தான். ஆனால் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினது உண்மை.''

''சீ அப்படியே நீ செய்திருந்தாலும், உன் தொழிலைப் பத்தித் தெரிஞ்ச அடுத்த விநாடியே நான் உன்னை விட்டு ஓடியிருப்பேன். பல பெண்களோட கண்ணீரில் வாழ்ந்துகிட்டிருக்கிற உன்னோட வாழறதே பாவன்...சண்டாளா...நீ நல்லாவே இருக்கமாட்டே! அந்தச் சுந்தரமூர்த்தி போலக் கையும், காலும்...''



''காதல் கடிதம் கத்தை, கத்தையா எழுதிட்டு கண்ணகி போலச் சபிக்கிறியா''- அரக்கத்தனமாகச் சிரித்தான் அவன்.

நெஞ்சில் நெருப்பாகக் கனன்றது அனுபமாவிற்கு. ''ஆமாண்டா! உன்னால் நாசமாக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணும் கண்ணகிதான். வயிறெரிஞ்சு தங்கள் வாழ்வை விலை பேசிய கதைகளை நினைச்சுக் கண்ணீருடன் சபிக்கிற ஒவ்வொருத்தியும், நவீன கண்ணகிதான்...தெரிஞ்சு கொள்ளு-என்னைப் பயமுறுத்தாதே!''

''ரொம்பத் தெம்பாவே பேசறதா எண்ணமோ?. அந்தக் காதல் கடிதங்களை, உன் கல்லூரித் தலைவி பார்க்க வேணாமா? அப்ப உன் மூஞ்சி?''

''என் கல்லூரித் தலைவிக்கு என் கடந்த காலத்தைப் பத்தி அக்கறை கிடையாது. நான் ஒழுங்கா வேலை செய்து கல்லூரிச் சட்ட திட்டங்களைக் கடைபிடிச்சா போதும்-மேலும் அவங்களும் என்னைப் போல ஒரு பெண். அவங்களை அணுகி மனம் விட்டுப் பேசி எனக்கேற்பட்டிருக்கும் ஆபத்தை விவரிச்சு, அவங்களை என் பக்கம் என்னால ஈர்த்துக்க முடியும்.''

''உன் கணவன்கிட்டே சொல்லி அவர் மனதை நான் குழப்பினால்?''

''உனக்கேண்டா இந்தக் கேடு கெட்ட எண்ணம்?''

''உன்மேலே ஏற்பட்டிருக்கும் தவிர்க்க முடியாத மோகம்!''

''என் கணவர்கிட்டே கொண்டு கடிதங்களை காட்டிக்கோ, பயமில்லை...''

''என்ன நேரும் தெரியுமா-? அவர் மனதில் சந்தேகம் ஏற்படும். அப்படி ஏற்படும் வகையில் என்னால் பேசவும் முடியும்-அவர் மனதில் சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தால் உன் வாழ்வு குலைந்து போகும்...நாளடைவில் உன் மேல் வெறுப்பு

ஏற்பட்டு அவரே உன்னை ஒதுக்கிவிடுவார். அத்தோட நான் விடுவேனா...?உன் கல்லூரித் தலைவிக்கிட்டே உன்னைப்பத்தி அசிங்கமாச் சொல்லி-உன்வேலையைப் போக்கிவிட முயலுவேன்.''

''வேலை போனாலும் அக்கறையில்லை-நான் படிச்சவ. வேற வேலை தேடிக்க முடியும்...ரொம்பப் பயம் காட்டவேண்டாம், ராஸ்கல்!''

''போனில் பேசறதினாலே...ரொம்ப துணிச்சலா கண்டபடி திட்டறே...நேரே அங்கே வந்தேன்னா பெட்டிப் பாம்பா அடங்கிப்போவே...உன்னைப்போலக் கேஸ்கள் எத்தனை பாத்திருப்பேன்னு நினைக்கிறே...வேலை தேடிக்கிற சாமர்த்தியம் உனக்கு இருக்கு, ஒப்புக்கிறேன். வாழ்க்கையே போயிட்டா-அதை எப்படி மறுபடி தேடிப்பே...''-ஹரிநாதன் மறு பக்கத்தில் அட்டகாசமாகச் சிரித்தான்.

உடம்பெல்லாம் நெருப்பாகி விட்டது போன்று ஆத்திரத்தில் அவள் கொதித்துப் போனாள்.

''வேலை போனாலும் நான் அஞ்சமாட்டேன். வாழ்க்கை போனாலும் பயப்பட மாட்டேன். நான் ஒரு சமையல்காரியோட மகள்...அடிமட்டத்திலிருந்து வந்தவள். மனதில் சில அழுத்தமான கொள்கைகள் கொண்டவ. படிப்புக்குத் தக்க வேலை கிடைக்காட்டி கொஞ்சமும் அஞ்சாமப் புடவைத் தலைப்பை இழுத்துக் கட்டிக்கிட்டு நாலு வீட்டிலே பாத்திரம் தேச்சுப் போட்டு பிழைச்சுக்குவேன். என்னால் பல்லாக்கிலும் ஏற முடியும்-கீழே இறங்கி நடக்கவும் முடியும். அயோக்கிய நாயே! வைடா போனை-ரொம்ப பயமுறுத்தினா போலீசைக் கூப்பிடுவேன், தெரிஞ்சுக்கோ...'' கோபத்துடன் கத்தினாள்.

''போலீஸ்ஸுன்னா உடனே மயக்கம் போட்டுவிடுவேன்னு நினைக்காதே...போலீஸ், ஜெயில் இதுகள் எல்லாம் எனக்குத்



தண்ணி பட்டபாடு. அதனாலே இந்த மிரட்டலுக்கு நான் மசிய மாட்டேன்...நமக்குள்ளே சமாதானமாகப் போயிட்டா உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது. வீணா ரசாபாசம் வேண்டாம். உன் கணவன் ஊரில் இல்லை என்கிறது எனக்குத் தெரியும். உன் வீடு எங்கே இருக்குன்னு தெரியும். நீ தனியா இருக்கேன்னும் தெரியும். இன்னிக்கு இராத்திரி உன்னோட வந்து தங்க ஆசைப்படறேன். ஒரு இராத்திரி... அந்த உரிமையை எனக்குக் கொடு...''

கிடுகிடுவென்று அனு உடல் நடுங்கிப் போனாள். நெஞ்சு வேகமாகத் துடித்தது. பாவி கொஞ்சமும் கூச்சமில்லாமல் என்ன கேட்கிறான். பதறிப் போய்விட்டாள். உணர்வுகளை நொடியில் சமாளித்துக் கொண்டாள்.

''அந்தக் கடிதாசிகளை அப்பத்தான் என்கிட்ட திருப்பிக் கொடுப்பியா?''

''பார்த்தியா? நீயே என் வழிக்கு வந்துட்டே. ஒரு நாள் உன்னோட சந்தோஷமா கழிக்க ஓர் கடிதம் என்கிற தவணை முறையிலே உன் கடிதங்கள் எல்லாம் திருப்பித் தரப்படும். அத்தோட என் கைச் செலவுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் எடுத்து வைச்சுடு...அடுத்தவாட்டி வரும்போது பணம் கேட்க மாட்டேன்...இன்னிக்குச் சாயங்காலம் இருட்டினதும் வந்து கதவைத் தட்டுவேன். அக்கம் பக்கத்துக்குத் தெரியாம நீ அழைச்சிக் கொண்டாள், உன் மானம் பிழைக்கும். இல்லாட்டா கலாட்டா பண்ணி, நாலு பேருக்குத் தெரியறாப்போல அடிக்கடி நான் வந்து போவதுபோல, ஒரு பெரிய கதையைக் கிளப்பிவிடுவேன்...

''உசிரையே கொடுப்பேன்னு காதல் கடிதம் எழுதுனியே. இப்போ உன் உடம்பைக் கொடுக்க ரொம்ப யோசிக்கிறியே? என் விரோதத்தைச் சம்பாதிச்சுக்கிட்டா உன் வேலை போயிடும். உன் வாழ்வு போயிடும். அக்கம் பக்கத்திலே உன் மானம் போயிடும். அதனாலே எனக்குப் பணிஞ்சு போனால்...உன் வேலை, கணவன்

மானம் மரியாதை இதுகளோடக் கூட என்னைப்போல ஒரு உல்லாசமான காதலனும் போனஸாகக் கிடைப்பான்...என்ன சொல்றே...?''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் அனுபமா.

''நீ சொல்றபடி செய்யறதுதான் சரின்னு படறது. ஒப்புக்கிறேன். ஆனால் இன்னிக்கு முடியாது. இன்னிக்கு என் சிநேகிதி ஒருத்தியின் மகள் ராத்திரி சாப்பாட்டுக்கு வந்துட்டு இங்கேயே தங்கப் போறா. நாளை மாலை எந்தவிதமான குறுக்கீடும் இருக்காது. நீ தாராளமா வரலாம்...உன்னோட சண்டை ஏன்... சமாதானத்தோடவே போயிடறேன்...ஓ.கே?''

''ஏதாவது ஆள்படை திரட்டி அடிச்சு விரட்டலாம்னு திட்டம் போட்டா அடுத்த நாளே அத்தனை கடிதங்களையும் உன் புருஷன் மூஞ்சியிலே போட்டு விடுவேன். எந்தக் கணவனும் இந்த அதிர்ச்சியைச் சட்டுனு ஏத்துக்க மாட்டான். அதுவும் உன் கணவனைப் போல ஓர் உயர் மட்டத்து அதிகாரிக்கு இது ஒரு பெருத்த இடியாக இருக்கும். அதற்குப் பிறகு அலுவலகம் முழுவதும் கிசுகிசுக்கும்படி கதை கட்டிவிடுவேன். அப்போ அவன் கதி? உன்னை உன் கணவன் விஷமாக வெறுப்பான்? ஒரு சமயம் உடனடியாக விவாகரத்துக்கு ஏற்பாடு செய்தாலும் செய்வான். அவன் மானம் மரியாதைகளுக்கு அஞ்சி வாழும் ஒரு சராசரி மனிதன்... முடிவில் உன் வாழ்வுதான் அழிஞ்சு போகும். விவாகரத்துக்குப் பிறகு, அவன் விரும்பினால்...மாலையோடு அவனை மணக்கப் பெண்கள் வரிசையில் வந்து நிப்பாங்க. உன்னை எவன் ஏறெடுத்துப் பார்ப்பான்?''

''தெரியும். ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதின்னு இருக்கும் சமூகம். என் வாழ்க்கைதான் பாழாகும். என் கணவன் இன்னொரு நல்ல பெண்ணைக் கட்டிக்கொண்டு சுகமாக இருப்பார்.''



''உனக்கு உன் புருஷனும்-இந்த சுகமான வாழ்வும் தேவைதானே?''

'கட்டாயம் தேவை.''

''இப்போ நீ எனக்கும் தேவை-நாளை சாயங்காலம் இருட்டும் சமயம்...அதாவது ஞாயிறு மாலை நான் வருவேன். உனக்கு என் பரிசாக ஒரு ஃபாரின் செண்ட் கொண்டு வரட்டுமா?''

''நீயே எனக்குப் பெரிய பரிசு-வேண்டாம். நீ மட்டும் வந்தால் போதும்''-ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அனு சிரித்தாள்.

''அப்பாடா - நம் கணக்கு வழக்கு ஒரு வழியா தீர்ந்துடுச்சின்னு மகிழ்ச்சி. பை - பை ஸ்வீட் ஹார்ட்.''-போனை வைத்தான். முகத்திலிருந்து உதிர்ந்து, கழுத்து மீது வழிந்து மார்பையும் ரவிக்கையின் கழுத்தையும் நனைத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு - பட படத்த நெஞ்சோடு வேதனையில் குடல்கள் புரள - அருவருப்பு உணர்வில் உடல் நடுங்க...அவள் அப்படியே சோபா மீது சாய்ந்து விட்டாள்.

இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்?

என்ன செய்யப் போகிறாள்? ஐயோ! ஹரிநாதன் என்கிற பாம்பு அவளைக் கொத்திவிடப் போகிறதா-?

சிறிது நேரம் அப்படியே செயலற்றுப் போய் உட்கார்ந்திருந்தாள். திடீரென்று மூளையில் அந்தத் திட்டம் பளிச்சிட்டது. அருகிலிருந்த டிராவல் ஏஜென்ஸியைத் தொலைபேசியில் அழைத்தாள். ஹைதராபாத்துக்கு- விமானம்- அல்லது இரயில் பயணத்துக்கு அவசரமாக ஒரு டிக்கெட் வாங்கித்தர இயலுமா? - விசாரித்தாள்.

''மாலை ஹைதராபாத் எக்ஸ்பிரஸில் ஒரு டிக்கெட் வாங்கித்தர முடியும்...இரண்டாம் வகுப்பு. அன்ரிசர்வ்ட், பரவாயில்லையா-?''

''பரவாயில்லை. அதை உடனடியாக வாங்கி வைக்கவும். நேரில் பெற்றுக் கொள்கிறேன்,''-கூறிவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

தெருவில் நடமாட்டம் அதிகமிருக்கவில்லை. பாவிப்பயல் ஹரிநாதன் எங்கேயாவது நின்றுகொண்டு அவள் வீட்டைக் கண்காணிக்கப் போகிறானோ என்கிறதொரு பயம். சுற்றுமுற்றும் பார்த்தாள். அவளுக்குத் தெரிந்த யாரையும் தெருவில் காணவில்லை.

வெளியே வந்த பிறகுதான் ஞாபகம் வந்தது. அவசர மாக அவள் ஹைதராபாத்துக்கு ஒரு தந்தி அனுப்ப வேண்டுமே?

அருகிலிந்த தபாலாபீசுக்கு விரைந்தாள். அன்று மாலை ஹைதராபாத் எக்ஸ்பிரசில் அவள் புறப்படுவதாகவும் - நிலையத்தில் வந்து சந்திக்க வேண்டும் என்றும்-தோழி சரயூவிற்குத் தந்தியை அனுப்பிவிட்டு, ரிக்ஷா ஒன்றைப் பிடித்துக் கொண்டு அருகிலிருந்த அவர்கள் வங்கிக்குச் சென்றாள். வங்கி லாக்கரில் தாலியைத் தவிர தன் மேலிருந்த நகைகள் அனைத்தையும் கழற்றி வைத்துப் பூட்டினாள். செலவுக்குத் தேவையான கணிசமானதொரு தொகையைத் தன் கணக்கிலிருந்து எடுத்துக் கொண்டு வீட்டுக்கு விரைந்தாள்.

கல்லூரித் தலைவியின் வீட்டுத் தொலைபேசி எண்ணைச் சுழற்றினாள். சாதரணமாகத் தலைவிக்குத் தன் கீழ் வேலை பார்ப்பவர்கள் தன் வீட்டுக்கு டெலிபோன் செய்வது பிடிக்காது-ஆனால் அனுவின் அதிர்ஷ்டம், அன்று கல்லூரித் தலைவி நல்ல மனநிலையில் இருந்தாள்.



''பம்பாய்க்கு அவசரமா இன்னிக்குப் பயணப்பட வேண்டியிருக்கு. என் வளர்ப்புத் தாய் மாரடைப்பில் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் இருக்கா. ஒரு வாரம் லீவு தேவை...கொஞ்சம் தயவுசெய்து எனக்கு லீவு கொடுத்து உதவணும்...''குழைவாகப் பணிவாகக் கேட்டுக் கொண்டாள். ''லீவு மனுவைத் தபால் மூலம் அனுப்பி விட்டுக் கிளம்பு...நான் பார்த்துக்கிறேன்.'' தலைவி நல்ல வாக்குக் கொடுத்து விட்டாள்.

முதல் வேலையாக லீவுக்கு மனு எழுதி-தபால் உறையில் போட்டு, முகவரி எழுதி ஒட்டிக் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள். வழயில் எங்கேயாவது ஒரு தபால் பெட்டிக்குள் அதை வீசிவிட வேண்டுமென்ற திட்டம். ஒரு சிறு பெட்டியில் மாற்றுடை, சோப்பு, சீப்பு இத்யாதிகளை எடுத்து அடுக்கிப் பூட்டித் தயாராக வைத்துக் கொண்டாள். ஒரு பாட்டிலில் தண்ணீர், ஒரு சிறு தலையணை, வழிப் பயணத்துக்கு ஒரு சிறு டிபன் சம்புடத்தில் தயிர்ச் சோறு...

பயணத்திற்குத் தயாராகி விட்டாள். அலமாரிகளைப் பூட்டி, காஸ் அடுப்பைத் திருகி மூடிவிட்டு, ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு முன்னறை மேஜை மேல் ஒரு கடிதம் எழுத உட்கார்ந்தாள்.

அன்புள்ள மித்திரனுக்கு,

கடந்த சில ஆண்டுகளாக மனைவி என்ற தகுதி தந்து என்னை அன்புடன் ஆதரித்ததற்கு மிக்க நன்றி. பிரியும் காலம் வந்து விட்டது. பிரிந்து கிளம்புகிறேன். ஆனால் தங்களுடன் வாழ்ந்த அந்த இனிய நினைவுகளைச் சுமந்து கொண்டு கிளம்புகிறேன். காரணம் கேட்காதீர்கள். அதை உங்களால் தாங்கிக் கொள்ள முடியாது...

உங்கள்

**அனு**

எழுதி முடித்தபோது எழுந்த விம்மல்களையும், பொங்கிய கண்ணீரையும் அடக்கிக் கொண்டாள். நாசகாலன் ஹரிநாதன் வீட்டிற்கு வந்து அவளை நாசப்படுத்தும் முன் அவள் தாயார் செய்த அதே தந்திரத்தை இவள் இரண்டாவது முறையாகக் கையாளப் போகிறாள்; ஆபத்தைக் கண்டு ஓடப் போகிறாள்.

ஹரிநாதன் ஒரு சமயம் அவளைத் தேடிக்கொண்டு ஹைதராபாத்திற்கும் வந்துவிட்டால்-மீண்டும் எங்கே ஓடுவாள்-உலகின் ஓரத்திற்கா?

முன்னறை மேஜை மீது கண்ணாடிப் பூச்சாடியின் கீழ் மித்திரனின் கண்களில் படும்படி, கடிதம் நீட்டிக் கொண்டிருக்கும்படி, பத்திரமாக வைத்தாள். கடிகாரத்தைப் பார்த்தாள்-கிளம்பினாள். சரியாக இருக்கும் என்று மனதில் பட்டது...காலையிலிருந்து மப்பும் மந்தாரமுமாக இருந்த வானம் திடீரென்று கருத்துக்கொண்டு, தூர ஆரம்பித்தது. இதுவும் நன்மைக்கே-கொட்டும் மழையில்-தலையில் முக்காடு போட்டுக் கொண்டு ரிக்ஷாவின் பிளாஸ்டிக் மறைப்பில் மறைந்து கொண்டு டாக்ஸி ஸ்டாண்டுக்குப் போய்விடலாம்-வாசல் வழியே போனால் ஒரு சமயம் அவன் கண்களுக்குப் பட்டு விட்டால் ஆபத்து.

தோட்டத்துப் பின்பக்கச் சுவர் தாழக் கட்டப்பட்டது. அவள் முயன்றால் மெள்ள ஏறி...அதன் பின் பக்கம் போகும் சிறு சந்துக்குள் குதித்து விடலாம். அந்தச் சந்தின் முனையில் பல ரிக்ஷாக்கள் நிற்பது வழக்கம்.

கிளம்புமுன் வீட்டை ஒரு முறை பார்த்துக்கொண்டாள். அடக்கமாட்டாத வேதனையில் நெஞ்சு குமுறியது.

இன்பமாக அவள் வாழ்ந்து கொண்டிருந்த வீட்டிலிருந்து ஹரிநாதன் என்னும் சண்டாளன் கழுத்தைப் பிடித்துத் தள்ளி விட்டிருக்கிறானே பாவி -! கொதித்த நெஞ்சுடன், அவள் குமுறிய துயரத்தை அடக்கிக்கொண்டு வாயிற் கதவைப் பூட்டிவிட்டுத் தோட்டத்தின் பின்பக்கம் வந்தாள்.



மித்திரனை விட்டு அவள் பிரிந்து ஓடுகிறாள்... ஆனாலும் ஒரு விஷயம் மனத்திற்குச் சிறிது ஆறுதலைத் தந்தது. அவர்களது அன்பின் பிணைப்புச் சங்கிலியின் ஒரு துண்டோடுதான் பிரிகிறாள்.

மித்திரன் குழந்தையை அவள் பத்திரமாக வளர்ப்பாள். ஒரு நல்ல தாயாக இருந்து பரிவுடன் ஆளாக்குவாள் -பின்னர்...? மேலே தொடர்ந்து சிந்திக்க முடியாது கன்னத்தில் வழிந்த கண்ணீர் தலை மீது உதிர்ந்த மழைத்துளிகளுடன் வாயில் பட்டு உப்புக் கரிக்க... மெள்ள எம்பி... சுவரின் மீது ஏறிப் பக்கத்துச் சிறு சந்துக்குள், மழை இருட்டில் இறங்கி மறைந்து போனாள்.

தடக் தடக் கென்று இரயில் வண்டி எழுப்பிய ஓசையுடன் போட்டியிட்ட இதயத்துடன், அவள் வண்டிக்குள் ஒரு மூலையில் கூட்டத்தோடு ஒடுங்கிக் கொண்டிருந்தாள்.

பயண முழுவதும், மித்திரனைப் பற்றிய சிந்தனைதான்.

சில அலமாரிகளின் மறு சாவி மித்திரனிடம் கிடையாதே-சாவிக்கொத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டேனே- என்ன செய்ய! தபாலில் பின்னர் அனுப்பிவிட வேண்டும். எங்கிருந்து அனுப்புகிறோம் என்பது மித்திரனுக்குத் தெரியக்கூடாது.

மறுநாள் காலை, இரயில் நிலையத்தில் இறங்கியபோது அவள் தோழி, கணவருடன் அவளுக்காகக் காத்திருந்தாள். சரயூ முன்னைவிடச் சற்றுப் பருத்திருந்தாள். அவ்வளவுதான். வேறு மாறுதல்கள் இருக்கவில்லை.

கூட்டத்தில் தோழியைக் கண்டதும், ஓடிச்சென்று அவளை இறுகக் கட்டிக் கொண்டாள். அடிவயிற்றிலிருந்து புரண்ட துக்கம் நெஞ்சை அடைக்க... கண்களில் நீர் புரள, ''சரயூ! சரயூ...'' தாங்க முடியாது அனு விம்மி விட்டாள்.

''இவ்வளவு சுருக்கா...நீ புறப்படுவேன்னு தெரியாது. ஆனாலும் எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷம். என்னம்மா அனு, ஏன் அழறே... நான்தான் உன்னை அழைச்சிட்டுப் போக வந்திருக்கேனே... ஆனந்தக் கண்ணீரா...? இருக்காதா பின்னே... தாய்மை என்பது எத்தனை ஓர் இனிய அனுபவம் தெரியுமா... பெண்களுக்கு இயற்கை வழங்கி விட்டிருக்கும் ஒரு வரப்பிரசாதம்.'' - தோழியின் காதுகளில் மெல்லச் கிசுகிசுத்துக் கொண்டு தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அம்மாவின் அரவணைப்பிலே இருப்பது போன்றதொரு தெம்பில் உணர்வுகளைச் சமாளித்துக் கொண்டு அனு தோழியுடன் புறப்பட்டாள்.

கணவனைப் பிரிந்து இருந்தபோது கனத்த நேரம், நத்தையாக ஊர்ந்த நாட்கள் இப்போது இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. இது அனுவிற்கு மிக்க அதிசயமாகத் தானிருந்தது.

''அவரையும் கூட அழைச்சிட்டு வந்திருக்கலாம். ரெண்டு பேரையும் ஜோடியாகப் பார்க்கணும்னு ஆசைப்பட்டேன். ஆமாம், ஏம்மா, எல்லா நகைகளையும் கழற்றி வச்சுட்டு வந்திருக்கே...''- சரயூ மாமியார் பிரதிமா கேட்ட பொழுது அனு திடுக்கிட்டுப் போனாள்.

''இரயில் பயணங்கள் இப்போது ரொம்ப ஆபத்தாகி விட்டிருக்கு. ரொம்பத் திருட்டு நடக்கிறதுன்னு அடிக்கடி பத்திரிகையில் பார்க்கிறோமில்லையா. அதனால் அனுபமா எல்லா நகைகளையும் வீட்டில் கழற்றி வச்சிட்டு வந்திருக்கா. என்னைக் கேட்டால் அது புத்திசாலித் தனமான காரியந்தான்'' -தோழி சரயூ பரிந்து கொண்டு பேசினாள்.

''ஆமாம் அம்மா. நான் தனியா வந்ததினாலே, முன்னெச்சரிக்கையா நகைகளை வீட்டிலே விட்டுவிட்டு வந்துட்டேன்.'' -அனு மென்று விழுங்கினாள்.



''பொய் சொல்றா. ஒரு விலையுயர்ந்த பொருளைக் கூடவே கொண்டு வந்திருக்கா -அதான்- குட்டி மித்திரனைத் தனக்குள்ளே எடுத்து வந்திருக்காளே, அதை மறந்துட்டீங்களே'' - சரயூ பரிகசித்தபோது, அனு முகம் சிவந்து போனாள். இன்பமும் துன்பமும் கலந்த உணர்வுடன் நெஞ்சிலே ஒரு தவிப்பு. இப்படிப்பட்ட நல்லவர்களிடம் உண்மை நிலையைச் சொல்லாமல்... எத்தனை நாள்... இங்கே தங்கியிருக்க முடியும்?

''சுமங்கலிப் பெண்! இப்படிக் கையும் கழுத்தும் காதும் வெறுமையா இருக்கிறது நல்லா இல்லை. என் பெட்டியிலே ஒரு முத்துச் செட்டு வச்சிருக்கேன். அதைப் போட்டுக்கோ'' என்று பிரதிமா கூறிவிட்டு, தாயின் பரிவுடன் தன் அலமாரியிலிருந்து ஒரு சிறு நகைப் பெட்டியை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தாள். அதில் ஒரு ஜதை முத்துத் தோடுகள்- வளையல்கள்- ஒரு சிறு முத்து மாலை ஆகியவை இருந்தன. ''அப்பா இப்பத்தான் பார்க்க நல்லா இருக்கு''- நகைகளை அணிந்த பின்னர் பிரதிமா அவள் கன்னங்களைத் தொட்டு வழித்து, திருஷ்டி சொடுக்கினாள்.

சரயூ அடுத்த நாளே அவளைக் கடைக்கு அழைத்துச் சென்றாள். கற்கள் பதித்த, கண்ணைப் பறித்த வண்ண வண்ண ஹைதராபாத் வளைகளை வாங்கிக் கை நிறைய அடுக்கி விட்டாள். ''உன்னைக் கூடவே கொஞ்ச நாள் இங்கே வச்சிருந்துட்டு, பிறகு எங்கள் வீட்டிலேயே பிரமாதமா உன் வளைகாப்பை நடத்தனும்னு ஆசைப்பட்டேன். உன் கணவர் உன்னை அதுவரை எங்கள் வீட்டில் விட்டு வைக்க மாட்டாரே. நாளைக்கே வந்து நின்னாலும் ஆச்சிரியப் படறதுக்கில்லை... புறப்படுன்னு உடனே கூட்டிக்கிட்டு போயிருவாரோன்னு கவலை. அதனாலே... கைநிறைய வளைகளை வாங்கி அடுக்கி அழகு பார்க்கக் கூட்டி வந்தேன்'' சொல்லிக் கொண்டே கடைந்தெடுத்தாற் போலிருந்த அனுவின் இரு கரங்களிலும் குலுக்கிய வளைகளை மிகவும் ஆசையோடு பார்த்து சரயூ மகிழ்ந்தாள்.

''வளை போட்டுக்கிறதுக்கே சிருஷ்டிக்கப்பட்டது போல உன் கை எத்தனை மொழுமொழுன்னு இருக்கு... என் கையைப் பார். முண்டும் முரடுமா...'' சிரித்துக் கொண்டே தோழியின் கரங்களைச் செல்லமாக வளையல் ஒலிக்கக் குலுக்கினாள் சரயூ. தோழியின் கபடமற்ற அன்பில் அனுவின் மனம் கரைந்து போனது. இத்தனை நல்லதொரு தோழியை இன்னமும் ஏமாற்றுவது முறையா...? உண்மையைச் சொல்லிவிட்டால்...?

''விடியற்காலையிலேயே உன்னை யார் எழுந்திருக்கச் சொன்னாங்க? பல் துலக்கிட்டுப் படுக்கையிலேயே இருந்தா... நான் உனக்கு காப்பியும் ரொட்டியும் எடுத்துவந்து கொடுக்க மாட்டேனா... என்னை உன் தாயாட்டம் நினைச்சுக்க. இதுசமயம் உன் தாய் உயிரோடு இருந்தா உன்னை ஒரு வேலை செய்ய விடுவாங்களா - குளியலறையில் ஜாக்கிரதையா காலை வச்சு நடம்மா - வழுவழுப்பான மொசயிக்கைப் போட்டுத் தொலைச் சுட்டான். சறுக்கி விழுந்துட்டீன்னா - குழந்தைக்கு ஏதாவது ஆபத்து நேரலாம்'' -தாயின் பரிவோடு பிரதிமா எச்சரித்தாள்.

சருக்கி விழாதிருக்கத்தானே அவள் இப்படி ஓடி வந்து அங்கே ஒளிந்து கொண்டிருக்கிறாள்.

அன்பைப் பொழியும் அந்தக் குடும்பத்தாரிடம் அவள் உண்மையைச் சொல்லாது ஒளித்து வைத்திருப்பது பெரும் தவறு -எத்தனை நாட்கள் இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு-? தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினாள். அவள் அங்கே வந்து ஆறு நாட்கள் ஓடிவிட்டிருந்தன. ஏழாவது நாள் காலை அவள் தன் கல்லூரித் தலைவிக்குத் தொடர்ந்து லீவு கேட்டு ஒரு கடிதம் எழுத மேஜையருகே உட்கார்ந்தாள்.

பம்பாய்க்கு போக வேண்டுமென்றுதான் ஆரம்பத்தில் லீவு கேட்டாள். கடிதம் ஹைதராபாத்திலிருந்து வந்திருப்பதைத் தலைவி கண்டு கொண்டால்- சந்தேகத்திற்கிடமாகி விடுமே-?



சரயூவிடம் இனி மறைத்து வைப்பதில் பயன் இல்லை. அவளிடம் மனம்விட்டு எல்லாவற்றையும் சொல்லி- அவளுடைய உதவியைப் பெறவேண்டும். அவள் கணவர்- மாமியார் எல்லோரும் உண்மையைத் தெரிந்து கொண்டதும் கட்டாயம் உதவுவார்கள். முதலில் லீவு மனுக் கடிதத்தைப் பம்பாய்க்கு அனுப்பி- அங்கிருந்து சரயூவின் நண்பர்கள் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அது முதற் காரியம். மேஜை மேலிருந்த பேனா ஒன்றை எடுத்துக் கொண்டு... காகிதத்தைப் பரப்பிக் கொண்டு எழுதக் குனிந்தாள். பம்பாயில் அவளுக்குத் தெரிந்த முகவரி எதுவுமே கிடையாதே... என்ற நினைப்பு நெஞ்சை நெருடவே - சரயூவிடம் கேட்க எழுந்தவள், திடுக்கிட்டுப் போனாள்.

கதவைத் தள்ளிக் கொண்டு வந்த சரயூ- மிகவும் உரிமையுடன் ஓடி வந்து அவள் கழுத்தை இறுக்கமாகக் கட்டிக் கொண்டாள்.

''உனக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி சொல்லப்போறேன் - பதிலுக்கு நீ எனக்கு என்ன வாங்கித்தரப் போறே...'' தோழியின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு மகிழ்ச்சியில் ஆர்ப்பதித்தாள்.

மகிழ்ச்சி! அவள் வாழ்க்கையில் இனி மகிழ்ச்சி என்ன இருக்கிறது? கலவரத்துடன் விழித்தாள் அனு.

''இன்னிக்குக் காலையிலதான் என் மாமியாரோட பந்தயம் வச்சேன். இப்போ நான் ஜெயிச்சுட்டேன்? எனக்குத் தெரியுமே. இப்படித்தான் நான் தீபக்கை உண்டாகியிருக்கப்போ, எங்கம்மா வீட்டிலே பத்து நாள் இருக்கப் போனபோது - இவர் நிழல் போல மறுநாளே வந்து நின்னார்!''

இவள் என்ன சொல்கிறாள்...? அனுவுக்கு ஒரே குழப்பம்.

''மித்திரன் வந்திருக்கார் -ராத்திரியே வந்துட்டாராம்- ஹோட்டல்லே தங்கியிருந்தாராம். நம்ப வீடு இங்கே

இருக்கும்போது அவர் எப்படி ஹோட்டலுக்குப் போகலாம்னு- முன்னறையில் என் மாமியார் அவரோட சண்டை போடுறாங்க...''

''என்ன அப்படிப் பிரமிச்சுப் போய் நிக்கற... கதவைத் திறந்ததும் நானும் பிரமிச்சுப் போயிட்டேன். ஒர் ஆறு நாள் கூட உங்களால் அனுவை எங்கிட்ட விட்டுவைக்க முடியாதான்னு கேட்டுட்டு... உங்கிட்ட சொல்ல ஓடி வந்திருக்கேன்-'' பரபரப்புடன் மகிழ்ச்சியாகப் பேசினாள் சரயூ.

மித்திரனை நான் சந்திப்பதற்குள் -தரை பிளந்து என்னை அப்படியே விழுங்கிவிடக் கூடாதா? ஐயோ! அவர் முகத்தில் எப்படி விழிப்பேன்-?

குமுறிக் கூக்குரலிட்டு அழவேண்டும் போன்ற வேதனையுடன் அனு நாற்காலியை விட்டு எழுந்து கதவருகில் வருவதற்குள்- கனமான காலடி ஓசை கேட்டது. உள்ளே நுழைந்த மித்திரன், கதவைச் சாத்திக்கொண்டு, அதன் மேல் சாய்ந்தபடி அவளை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வையில் தெரிந்த உணர்வைப் புரிந்துகொள்ள அவளுக்கு அப்போது உடம்பிலோ, உள்ளத்திலோ, நினைவிலோ தெம்பில்லை. சுருண்டு விழுந்து விடுவாள் போலத் தொய்ந்து போனாள்.

''என்னை அப்படிப் பார்க்காதீங்க மித்திரன். எனக்குப் பயமா இருக்கு. உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன். அப்படிப் பார்க்காதீங்க-'' வார்த்தைகள் தடுமாறக் கண்களில் நீர் பொழிய, அவள் தழதழத்தபடி கீழே விழுந்து விடா வண்ணம் நாற்காலியின் பின்புறத்தை ஆதரவாகப் பற்றிக் கொண்டாள்.

''மித்திரன்! எல்லாத்தையும் விவரமா சொல்லிடறேன். என்னை மறுபடி அப்படிப் பார்க்காதீங்க...''- விசும்பினாள்.

''கண்களைத் துடைச்சுக்கோ- ஆபீஸ் காரை வாசலில் நிறுத்தி வச்சிருக்கேன். வெளியிலே எங்கேயாவது போய் பேசுவோம் வா'' என்றான் மித்திரன்.



பரபரப்புடன் முகத்தைக் கழுவி-பொட்டிட்டு - முடியைச் சீராக்கிக் கொண்டு அவள் வெளியே வந்தாள். குற்ற உணர்வின் சுமையால் நெஞ்சு கல்லாகக் கனத்தது. அன்பான அவள் கணவன் மித்திரன் இப்போது ஓர் அந்நியனைப் போல அவளுக்கு அச்சத்தைக் கொடுத்தான்.

''நாங்க சீக்கிரம் வந்துடுவோம்-'' கூறிக்கொண்டே அவள் உட்கார, காரின் முன் பக்கத்துக் கதவைத் திறந்தான் மித்திரன்.

''தனிப்பட பேச வேண்டியது ரொம்ப இருக்கோ? எங்கள் வீட்டில் பேசினால் சுவர்கள் கேட்டு விடும்னு பயமா...? சரி சீக்கிரம் சாப்பாட்டுக்குத் திரும்பி வந்துடுங்கோ - இரண்டு பேரும் சேர்ந்தாப்போல வந்திருக்கீங்கன்னு ஒரு பலமான விருந்து தயாரிக்க ஆரம்பிச்சிருக்கிறேன். ஹோட்டல்லே ஏதாவது சாப்பிட்டு விட்டு வந்து, சாக்குப்போக்குகள் சொன்னா ஒத்துக்க மாட்டேன். மாப்பிள்ளை பத்திரமா வண்டிய ஓட்டுங்க... ஜாக்ரதையா குழந்தையை அழைச்சிட்டுப் போய் விரைவா வாங்கோ-'' ஓங்கிய குரலில் உற்சாகமாகப் பேசிப் பிரதிமா வழி அனுப்பினாள்.

இரும்பு வளையம் முழுவதையும் அடைத்துக் கொண்டு வெள்ளை வெளேரென்று பூத்துச் சிரித்த போகன்விலீலா அடர்ந்து கிடந்த இடத்தின் அருகே- பார்க் பெஞ்சியில் அவன் உட்கார்ந்தான்.

பயந்துகொண்டே ஓரத்தில் அனு அமர்ந்து கொண்டாள். சிறிது நேரம் இருவரும் பேசவேயில்லை... வெடுக்கென்று மித்திரன் அவள் பக்கம் திரும்பினான்.

''உனக்கு என்ன தைரியமிருந்தா இப்படி ஒரு காரியத்தைச் செஞ்சிருப்பே?''- எடுத்த எடுப்பிலே கோபத்தோடு அவன் கேட்டதும் அனுபமா நடுநடுங்கிப்போனாள்.

''உங்களைச் சந்திக்கத் துணிவிருக்கவில்லை. உண்மையைச் சொன்னால் நீங்க நம்புவீங்களோ இல்லையோன்னு பயம்- இந்த நிலையில் எனக்கு இங்கு ஓடி வருவதைத் தவிர வேறே வழி-?''

''நான் கேட்கிறது வேறே. டாக்டர் ரேவதியிடமிருந்து பில்லும்... உன்னைப் பத்தின ரிப்போர்ட்டும் வந்திருந்தது. 'மிஸ்டர் மித்திரன் மகிழ்ச்சியான செய்தி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விரைவில் நீங்கள் தந்தையாகப் போகிறீர்கள். என் பாராட்டுதல்கள்' என்று ஒரு சிறு கடிதத் துண்டும் அதில் இருந்தது. இந்த மாதிரி சமயத்தில்- இத்தனை கிலோ மீட்டர் தொலைவுக்கு இரயில் பயணம் செய்ய உனக்கு என்ன துணிச்சல்... அதைத் தான் கேட்டேன். நமக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு இதனால் ஏதாவது பாதிப்பு நேர்ந்தால்-?''

''அப்படின்னா நீங்கள் என் கடிதத்தைப் படிக்கலையா?'' அனு வியப்பும் துயரமுமாக வினவினாள்.

''படிச்சேன். வேற யாரோ போல உன் காலேஜுக்கு மறுநாள் போன் பண்ணிக் கேட்டேன். நீ ஒரு வார லீவில் பம்பாய்க்கு போயிருப்பதாகத் தெரிஞ்சது. வேலைக்காரி நான் வந்ததும் என்னைப் பார்த்து ஒரு மாதிரி முழிச்சா. உண்மை அவளுக்குத் தெரிஞ்சா அசிங்கமாயிடும்னுட்டு... நான் உன்னை அவசரமாப் பிளேனில் பம்பாய்க்கு வரச் சொல்லியிருந்தேன். சொந்தக்காரர் ஒருத்தருக்கு உடம்பு சுகமில்லை. ஆபத்தான நிலையில் இருக்கிறார்- அதனாலே ப்ம்பாயிலேயே பத்துநாள் லீவு போட்டுட்டுத் தங்க வச்சுட்டேன்- இடையே எனக்கு ஒரு காரியமா சென்னைக்கு வர வேண்டியிருந்தது. அப்படியே வீட்டிலே திருட்டுப் போகாம... எல்லாம் பத்திரமா இருக்கான்னு 'செக்கப்' பண்ண வந்தேன் - இத்தனை விவரம் முருகம்மாளுக்குச் சொல்ல வேண்டியிருந்தது.''



அனுபமா குனிந்தபடி கால் கட்டை விரலால் புல் தரையைக் கிளறிக் கொண்டிருந்தாள்.

''பிறகு நீ எங்கேதான் போயிருப்பேன்னு, நாள் முழுவதும் யோசிச்சு மண்டையைக் குடைஞ்சு கொண்ட போதுதான் ஹைதராபாத் நினைவு வந்தது.''

''கழுதை கெட்டா குட்டிச் சுவர்னு நினைச்சுண்டு பார்க்க வந்துட்டீங்க. நான் இங்கே வந்ததின் காரணம் தெரியுமா?''

''தெரியும். ஹரிநாதன் என்கிறவன் என்னை சந்திக்க அலுவலகத்திற்கு வந்திருந்தான்.''

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அனு. அவள் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது.

''அந்தக் கடிதங்கள்- அவைகளைப்பற்றி ஏதாவது சொன்னானா''- திகிலுடன் கேட்டாள்.

''சொன்னான்... அவைகளைக் குப்பைக் கூடையில் போடச் சொன்னேன். பயமுறுத்துகிறவங்களைப் போலீசில் காட்டிக் கொடுத்துத் தக்க தண்டனை வாங்கித்தர என்னால் முடியும் என்றேன்.''

''அவன் உங்ககிட்ட பயந்துட்டானா...?''

''மறுபடி அவனை அங்கே பார்த்தால் கைகால்களை முறித்துக் கூவத்திலே போட்டுவிட்டு மறுகாரியம் பார்ப்பேன். அவன் விளையாட்டுக்கு வேற ஆளைப் பார்க்கணும்னு என் விஸ்வரூபத்தைக் காட்டினதும் பயல் கம்பியாகி விட்டான்.''

''அந்தக் கடிதங்களைப் பார்த்து என்னைப் பத்தித் தப்பா - நீங்க ஏதாச்சும் நினைக்கலையா? நான் உங்க கிட்ட சொல்லாது - மறைச்சு வச்சேன்னு கோபப்படலையா-?''

''எனக்கு எல்லாம் முன்தினமே தெரியும். மைத்ரேயி அம்மா உன்னைப் பத்தின விவரம் பூராவும் சொல்லியிருந்தாங்க.''

''தெரிஞ்சு கொண்டா என்னை நீங்க மனம் ஒப்பிக் கல்யாணம் செய்து கொண்டீங்க-''

''மனம் ஒப்பி, நீ நல்ல பொண்ணுனு புரிஞ்சு கொண்டு தான் கல்யாணம் பண்ணிக் கொண்டேன். அனு! இந்தக் கற்பு- கற்புங்கிற விஷயம்- காலத்துக்கு ஏற்றபடி- கணிப்பும் மாறுகிறது. மண்ணை அள்ளிப் பிசைந்து குடமாக்கி அதில் தண்ணீர் கொண்டு வந்த ரேணுகா கந்தர்வனின் நிழலைப் பார்த்து, கற்பழிந்து போன புராணக் கதையை இப்போ நடைமுறையிலே நாம் ஒத்துக்க முடியுமா? கமலஹாசன் எத்தனை அழகா இருக்கார்... என்னமா நடிக்கிறார்? ரஜினி என்ன ஸ்டைலா சண்டை போடறார் - என்று மாய்ந்து போகும் இளம் பெண்கள் அத்தனை பேரும்... அந்தப் பழைய புராணக் கணிப்பிலே... கற்பின் எல்லையை மீறினவர்களா?

''ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கின்ற கல்லூரிகள் பரவலா இருக்கு. சேர்ந்து வேலை பார்க்கும் அலுவலகங்களும் இருக்கு. இளமைக் கவர்ச்சியிலே ஒருவர் மேல் ஒருவர் பிரியப்படலாம். அந்தக் காதல் சில சமயம் வெற்றியடைந்து கல்யாணத்தில் முடியலாம்.... சில நேரங்களில் தோல்வி யடையலாம். காதலிப்பதில் மட்டுமே ஓர் ஆணோ, பெண்ணோ... நடத்தையில் தவறி விட்டார்கள் என்று கணிப்புச் செய்தால் வருங்காலத்தில் யாருமே நிம்மதியா வாழ முடியாது-''

''மித்திரன் உங்களுக்கு ரொம்பத் தாராள மனம்!''

''கணவன் மனைவி என்று திருமணத்தில் இணைகிற ஜோடிகளுக்கு இன்றும்- நாளையும்தான் சொந்தம். நேற்று அவர்களுக்குச் சொந்தமில்லை. கணவனுக்கு மனைவியினுடைய



நேற்றைய நிகழ்ச்சிகளைக் கேட்டறிய உரிமையில்லை- மனைவிக்கு கணவனது கடந்த காலத்திற்குள் புகுந்து குழப்பம் செய்ய எந்தவித உரிமையும் கிடையாது. உனக்குத்தான் தெரியுமே. நான் ஓமர்கயாத்தின் பக்தன் என்று.

Unborn tomorrow and dead yesterdy;
Why fret about them if today be sweet.

நேற்றும் - நாளையும் பற்றி நான் நினைக்க விரும்ப வில்லை... இன்று கிடைக்கும் இனிமையை -அனுபவித்து மகிழ்வுடன் வாழ விரும்புகிறவன்- இத்தனை வருஷங்கள் என் மனம்- உணர்வு - உள்ளத்தோடு கலந்து வாழந்த உனக்கு என்னைப் புரியலையா? அனு! மை ஸ்வீட் அனு - என்ன காரியம் செய்தே? என்னை எவ்வளவு மட்டமான மனிதனா நினைச்சே. என்னை விட்டுட்டு என் குழந்தையோட ஓடிவந்துட்டியேம்மா- உன்னை இந்த மித்திரன் விடுவானா? நீ எங்கே போனாலும்... உன் பின்னாலேயே நிழலாகத் துரத்திக்கிட்டு வரமாட்டானா-? உன் மேலே வச்சிருக்கிற அன்பை எத்தனை சாதாரணமாக நினைச்சு...'' சொல்லிக் கொண்டே அவளது கரங்களைப் பற்றியபோது உணர்ச்சி வசப்பட்டுப்போன அனுபமா, அது பொதுப்பூங்கா, மற்றவர்கள் இருப்பார்கள் என்ற நினைவை மறந்து போனாள்!

''மித்திரன்! நீங்க எத்தனை நல்லதொரு கணவன். எனக்கு இப்படி ஒரு பாக்கியமா? நினைச்சுப் பார்க்கக் கூட முடியலை...'' அவனது தோளில் சாய்ந்து கொண்டு விசும்பினாள்.

''நினைச்சுப் பார்க்க வேண்டாம்... என்னோட நீண்ட காலம் வாழ்ந்து பார்...அசடு... அழாதே- நாளைக்கு ஊருக்குப் பிளேனில் போக டிக்கெட் தயாரா வாங்கி வச்சிருக்கேன்... சரயூ மாமியார் குலாப்ஜாமுன் நன்னாவே செய்வாங்க... நாம்ப போய் முதல்லே விருந்து சாப்பிடுவோம். கிளம்பு...!''

''என் குழந்தையின் குரல் இனிமையாக இருக்கணும்னு
கையாலே உனக்கு இப்பவே இனிப்புத் தரப்போகிறேன்.
வாயைக் காட்டு.''

சட்டைப் பையிலிருந்த சாக்லெட்டை எடுத்து ஒடித்த ஒரு பகுதியை அவள் வாயில் போட்டு... மீதியைத் தன் வாயில் போட்டுக் கொண்டான். சாக்லெட்டை மென்று கொண்டே அவளைத் தழுவியபடி காருக்குத் தள்ளிக் கொண்டு போனான் மித்திரன்...

வாயில் சாக்லெட் இனிக்க... கன்னத்தில் வழிந்த கண்ணீர் உதட்டில் பட்டு உப்புக் கரிக்க... வருங்காலத்தில் நிகழப்போகும் இனிப்பு, கரிப்பு, கசப்பு எல்லாவற்றையும் மித்திரனின் பொருந்திய தோளின் அணைப்பிலே தாங்கிக் கொள்ள முடியும் என்ற தெம்பில் அனுபமா கணவனுடன் மகிழ்ச்சியாக நடந்தாள்.